ரூபா. 10.00

# உதயன்

UTHAYAN-A Lively National Tamil Daily www.uthayan.com கதிர்:520

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (15.10.2006)

# போவரின் வருகையுடன் பேச்சுக்கான இறுதி ஏற்பாடுகள் நிச்சயிக்கப்படும்?



## தேக்கநிலையைப் போக்குவதற்கு தீவிரமாக முயற்சிப்பார் அவர்

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்15

**இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உத்தேச ஜெனீவா சமாதானப் பேச்சுவார்தைக்கான இறுதி ஏற்பாடுகள் இந்த வாரத்தில் நிச்சயமாக்கப்படும் என்று நம்பகரமாக அறியவந்துள்ளது.**

இம்மாதம் 28, 29ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் குறித்த, சந்தேகப் பின்னணியுடன் கூடிய தேக்கநிலையைப் போக்குவதற்கு -

இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரும் நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் மிகத் தீவிரமாக முயற்சிப்பார் என்றும் தெரியவருகிறது.

விசேட தூதுவர் போவர் எதிர்வரும் வியாழக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார்.

அப்போது பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் குறித்து இணக்கம் காணப்படும் என்று கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவாப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்பான விவரங்கள் மற்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை மோதலில் 50 கலிபர் துப்பாக்கிகள் விடுதலைப் புலிகள் வசம்

கொழும்பு, ஒக்.15

முகமாலையில் நடந்த (முதனன்று) இடம்பெற்ற மோதலின்போது இரண்டு 50 கலிபர் துப்பாக்கிகள் உட்பட பெருமளவிலான ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலின்போது, இரண்டு 50 கலிபர் துப்பாக்கிகள், ஆறு பி.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கிகள், 17 ஏ.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கிகள்,15 ஆர்.பி.ஜி. உட்பட பெருமளவிலான ஆயுத தளபாடங்களை தாங்கள் கைப்பற்றியுள்ளனர் என விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் நேற்றிரவு தெரிவித்தார். (1)

## யசூசி அகாஷி இம்முறையும் பிரபாவைச் சந்திக்கும் சாத்தியமில்லை?

யாழ்ப்பாணம்,ஒக்.15

இலங்கைக்கு இன்று வரும் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி, வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பது அனேகமாகச் சாத்தியம் இல்லை என்று தெரிவருகிறது.

விசேட தூதுவர் அகாஷி தமது விஜயத்தின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார் என்று கொழும்பு செய்தி வட்டாரங்களில் பேசப்பட்டது.

தற்போதுள்ள சூழ்நிலையில் அவர் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கும் சூழ்நிலை இல்லை என்று கிளிநொச்சி வட்டாரங்கள் நேற்றுத் தகவல் தெரிவித்தன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் மரணித்த படையினரது இறுதிச் சடங்கில் ஜனாதிபதி மஹிந்த

முகமாலையில் இடம்பெற்ற மோதல்களின் போது உயிரிழந்த படையினரின் இறுதிச்சடங்குகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்கலந்து கொண்டார்.

ஹெலிகொப்டரில் சென்று அவர் இறுதிச்சடங்கில் பங்குபற்றினார்.

ஆனமடுவ, கல்கமுவ ஆகிய தொகுதிகளில் உள்ள நவேத்தகம, சங்கபாலி ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, முகமாலை மோதலில் உயிரிழந்த படையினரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டார் என ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் விடுக்கப்பட்ட ஆலோசனைகளையும் கருத்திற் கொள்ளாது ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டார் என தெரிவிக்கப்பட்டது.

இறுதிச்சடங்கில் உரையாற்றிய அவர், பின்தங்கிய கிராமங்களில் இருந்து படையில் சேர்ந்த இளைஞர்கள் நாட்டுக்காக தம் உயிரைத் தியாகம் செய்துள்ளனர் எனத் தெரிவித்தார். (1)

## ஐந்தாம் கட்ட உணவு விநியோகம் நிவாரண அடிப்படையில் அமையும்

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.15

அடுத்த கட்ட - ஐந்தாம் கட்ட - உணவு விநியோகம் நிவாரண அடிப்படையில் - இந்த விநியோகம் இவ்வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் நாலாம் கட்ட உணவு விநியோகம் இவ் வார முடிவுக்குள் முற்றுப்பெற்றுவிடும் என்றும் -

இதுவரை 75சதவீதமானவர்களுக்கான விநியோகம் பூர்த்தியடைந்துவிட்டது என்று அறிக்கைகள் கிடைத்துள்ளன என்றும் - அரச அதிபர் தெரிவித்தார்.

ஏனையோருக்கு இன்று அல்லது நாளை

(10ஆம் பக்கம் பார்க்க)



இறுதி வணக்கம் செலுத்துகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

## பேக்கரியினுள் நுழைந்து ஆயுததாரிகள் வேட்டு

### ஊர்காவற்றுறையில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.15

ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றினுள் நுழைந்து இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட பேக்கரியினுள் நுழைந்த இனம்தெரியாதோர் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் -

இதனையடுத்து அங்கு பாண் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோர் நாலாபுறமும் சிதறி ஓடினர் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கையில்

# சிறுபான்மையினரின் போதிய பிரதிநிதித்துவத்துடன் மேல் சபை ஒன்றை நிறுவ அரசுக்குப் பரிந்துரை

### ஏழு பிரதான அமைச்சுக்களில் இரு இணைப் பதவிகள்

கொழும்பு, ஒக்.15

மத்தியில் மேல் சபை ஒன்றை நிறுவி, அதில் சிறுபான்மை இன மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட ஏழு பிரதான அமைச்சர் பதவிகளுடன் சிறுபான்மை இனப் பிரதிநிதிகளுக்கு இரண்டு இணைப் பதவிகள் வழங்கப்படவேண்டும்.

அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு மேற்கண்ட பரிந்துரையை அரசிடம் முன்வைத்துள்ளது.

நிபுணர்குழு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் கூடி ஆராய்ந்து மொத்தம் எட்டு பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

இந்தப் பரிந்துரைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரச குழுவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழு, சிறுபான்மையினருக்கு இருந்த குறைபாடுகளைக் கவனமாக

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போர்நிறுத்த உடன்பாடு என்றும் வலுமிக்கது; திருத்தப்படவோ கைவிடப்படவோ முடியாதது

**இரண்டு தசாப்த காலமாக இந்த நாட்டில் இடம்பெற்று வந்த போரைத் தற்காலிகமாகவேனும் நிறுத்துவதற்கு காரணமாக அமைந்தது 2002 பெப்ரவரி 22 இன் ரணில் - பிரபா போர்நிறுத்த உடன்பாடு. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவுணம்.**

**ஆனால் தென்னிலங்கையின் கடுங்கோட்பாட்டு - போரினவாத - சக்திகள், அந்த உடன்பாட்டில் திருத்தம் செய்யவேண்டும் என்றும் கைவிடவேண்டும் என்றும் அவ்வப்போது கோரிக்கைகளையும் அழுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றன.**

**மஹிந்த அரசாங்கமும் இது விடயத்தில் பேரினவாதிகள் பக்கத்துக்குச் சாய்ந்து போகும் அறிகுறிகளே நிறையவும் தென்படுகின்றன.**

**இத்தகைய பின்னணியில் போர் நிறுத்த ஒப்பந்தம் திருத்தத்துக்கு உரியதோ அன்றிக் கைவிடப்படக் கூடியதோ அல்ல என்று வலியுறுத்துகிறது இக்கட்டுரை.**

**'இருதின' பத்திரிகையில் இம்மாத முற்பகுதியில் பிரசுரமானது இது.**

இரு தசாப்த காலமாக இந்தநாட்டில் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. ஆனால், அதுவரை காலமும் அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கியைப் பயன்படுத்திவந்த நபரொருவருக்கு துப்பாக்கியைப் பயன்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கியதற்கு ஒத்ததொன்றாக அந்தப் போர்நிறுத்த உடன்பாட்டின் இன்றைய நிலை அமைந்துள்ளது எனக் குறிப்பிடமுடிகிறது. அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கியைப் பயன்படுத்தி நபரொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வது மனிதக்கொலை முயற்சி மற்றும் அனுமதிப் பத்திரமின்றித் துப்பாக்கியை வைத்திருந்தமை ஆகிய செயற்பாடுகளின் அடிப்படையில் சட்டவிரோதச் செயற்பாடாகக் கொள்ளப்படும். அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட துப்பாக்கி மூலம் நபரொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அச்சம்பவம் வேறொரு தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. இன்றுபோர் நிறுத்த உடன்பாடும் அத்தகைய தோற்ற

## அதனால் பலன் கிடைக்கவில்லை என்று கூறுவது அர்த்தமற்றது

மொன்றையே வெளிப்படுத்துகிறது எனக் கொள்ள இயலும். போர்நிறுத்த உடன்பாட்டை முன்னிலைப்படுத்தி அதற்குத் தாம் மப்பளிப்பதாகத் தெரிவிக்கும் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய இரு தரப்புகளும் மறுபுறம் பிரகடனப்படுத்தப்படாத யுத்தமொன்றில் ஈடுபட்டு வருகின்றன. அரசு அத்தகைய தனது செயற்பாடுகளை பதில் தாக்குதல் நடவடிக்கையெனத் தெரிவித்து நியாயப்படுத்தி வருகிறது. அதேசமயம் தான் யுத்தமொன்றில் நேரடியாக ஈடுபடவில்லை எனவும் காரணமொன்றை முன்வைத்து வருகின்றது மேற்கொண்டும் கிளைமோர் தாக்குதல்களை பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டும் ராணுவ முகாம்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுவரும் விடுதலைப் புலிகள் கூடத் தாம் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளவில்லையெனவும் அதனை உரியமுறையில் கடைக்கொண்டு வருவதாகவும் தெரிவித்து வருகின்றனர். மறுபுறம் அரசும் கூட விடுதலைப் புலிகளது கருத்துப் போன்றே தானும் கருத்து வெளியிட்டு வருகின்றது. எனவே, இன்று போர்நிறுத்த உடன்பாடு பூஜையில் பலியிடப்படும் பலிக்கடாவின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டவேளையில் அந்தச் சமயத்தில் நாட்டின் ஜனாதிபதியாகவிருந்த சந்திரிகா அதனைக் கடுமையான தொனியில் விமர்சித்து வந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகள் அமைப்புடன் போர்நிறுத்த உடன்பாட்டை மேற்கொள்வது பற்றித் தமக்குத் தெரியப்படுத்தவில்லை எனக் குற்றம்சாட்டியதோடு, அத்தகைய உடன்படிக்கை காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் சந்திரிகா குற்றம்சாட்டியிருந்தார். இந்தக் கருத்துக்கு மேலும் மெருகூட்டும் வகையில் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கடுங்கோட்பாட்டுத் தரப்புகள் போர்நிறுத்த உடன்பாடு காரணமாக நாட்டின் இறைமை நாசமடைந்து விட்டதாகக் கண்டனம் தெரிவித்தன.

**பக்கச்சார்பாகச் செயற்பட்ட சந்திரிகா**

இந்த விடயத்தை சிங்களமக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதில் ஜே.வி.பி. முன்னின்று செயற்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசினால் நிர்வகிக்கப்பட்டு வந்த மூன்று அமைச்சுகளின் பொறுப்புகளை ஜனாதிபதி சந்திரிகா தன்வசம் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு ஜே.வி.பியின் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரம்மிக்கவையாக அமைந்தன. கடைசியில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம்கொண்டிருந்த ஐ.தே.கட்சி அரசை தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும் அளவுக்கு சந்திரிகா பக்கச்சார்பாக செயற்படநேர்ந்தது. அந்தப் பொதுத்தேர்தல் வேளையில் நாட்டின் முக்கிய விடயமாக-



பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரத்தின் முக்கிய கருப்பொருளாக-அமைந்தது இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையே ஆகும். அந்தப் பொதுத் தேர்தல் பிரசாரங்களின்போது ஜனாதிபதி சந்திரிகா தமக்குச் சாதகமான வாய்ப்பை ஈட்டிக்கொள்ளும் நோக்கில் போர்நிறுத்த உடன்பாட்டைக் கடுமையாக விமர்சித்துக் கருத்து வெளியிட்டு வந்தது மட்டுமன்றி, ஐ.ம.சு.கூட்டணி அரசின் நிர்வாகத்தில் போர்நிறுத்த உடன்பாடு மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுமென நாட்டுமக்களுக்கு வாக்குறுதியளித்து வந்தார்.

போர்நிறுத்த உடன்பாட்டை ஒரு நச்சுமரமாகச் சிங்கள மக்கள் மனதில் பதியவைக்கும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா கருத்து வெளியிட்டு வந்தமையால் சிங்கள மக்களின் மனதில் அது அந்தவகையிலேயே நிலைபெற்றுவிட்டது. அப்போர்நிறுத்த உடன்பாட்டை இரத்துச்செய்யுமாறு ஜே.வி.பி. தலைவர்கள் பொதுமேடைகளில் ஆக்ரோசமாக அறைகூவல் விடுத்து வந்தனர். அவர்களது அத்தகைய ஆவேசப் பேச்சுகளை அவதானித்தவேளையில் சிங்களமக்கள் வரலாற்று வீரபுருஷர்களாகக் கருதும் கெப்பிட்டிப்பொல, கொங்காலே கொட பண்டா ஆகியோர் இறப்பினின்றும் உயிர்த்தெழுந்து போருக்குத் தயாராவது போன்று பொதுமக்களது உணர்ச்சிகளைத் தூண்டும் கருப்பொருளாக அப்போர் நிறுத்த உடன்பாடு கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டுவந்தது.

அடுத்து இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.கூட்டணி அதிகாரத்தைக் கைப்பற்றியதுடன், ஜே.வி.பியும் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டது. ஆனால், ஜனாதிபதி தாம் நாட்டுமக்களுக்கு வாக்குறுதியளித்த விதத்தில் போர்நிறுத்த உடன்படிக்கையை இரத்துச்செய்யவோ அல்லது திருத்தம் செய்யவோ முன்வரவில்லை. மாறாகப் போர்நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் அதேவகையில் கடைப்பிடிக்கப் படுமெனவும் அனுசரணையாளர் பணியை நோர்வேத் தரப்பு மேற்கொள்ளுமெனவும் பகிரங்கமாகத் தெரிவித்தார். ஐ.ம.சு.கூட்டணி அரசின் அமைச்சர்கள் கூட பிற்காலத்தில் போர்நிறுத்த உடன்பாடு சிறப்பானதொன்றேயென வர்ணிக்கும் நிலை ஏற்பட்டதோடு, எதுவுமே செய்ய இயலாதநிலையில் ஜே.வி.பி. அரசிலிருந்து வெளியேறும் நிலையும் ஏற்பட்டது. அத்துடன், நிறுத்திக்கொள்ளாது அரசு, விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு உள்நாட்டில் உலங்குவானூர்திப் பயண வசதிகளையும் வழங்கி போர்நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்தும் பேணி வருவதில் உற்சாகம் காட்டிச் செயற்பட்டு வந்தது.

**ஜே.வி.பியின் கடும் கோட்பாடு**

ஜனாதிபதி [illegible] வில் அடுத்த ஜனா[illegible] தேர்தலுக்கான ஐ.ம.சு.கூட்டணி சா[illegible]

பெற்ற மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி. தேர்தலுக்கு முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. போர்நிறுத்த உடன்பாட்டை இரத்துச்செய்தல் அல்லது உடன்பாட்டில் மாற்றங்களை மேற்கொள்ளல் மற்றும் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெளியேற்றல் போன்ற இனவாதக் கடுங்கோட்பாட்டு நிபந்தனைகளை முன்னிலைப்படுத்திய அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டதன் மூலம் ஜே.வி.பி. ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்துச் செயற்பட்டது. கடந்த ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின்போது ஜே.வி.பியினரின் இந்த நிபந்தனைகளே பிரசாரக் கருப்பொருளாக முக்கிய இடம்பிடித்துக்கொண்டது. நாட்டின் பெரும்பான்மைஇன மக்களும் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவினதும் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளின் தலைவர்களதும் கருத்துகளுக்கு ஆதரவுவழங்கி மஹிந்த ராஜபக்ஷவை இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர். போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முற்றுமுழுதாக அங்கங்கள் செயலிழக்கும் பக்கவாதநோய் அந்த வேளையிலிருந்து தொற்றிக்கொண்டது. நாட்டுமக்களுக்கும் ஜே.வி.பிக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கடந்த ஓராண்டு வரையான காலமாக வற்புறுத்தல்களை எதிர்நோக்க நேர்ந்தபோதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரையில் போர்நிறுத்த உடன்பாட்டை இரத்துச்செய்யவோ அல்லது அதில் மாற்றங்களை மேற்கொள்ளவோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டதில்லை. போர்நிறுத்த உடன்பாட்டை இரத்துச் செய்தல் வேண்டும் என்பதும் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வே வெளியேற்றப்படவேண்டுமென்பதும் கடும்கோட்பாட்டுத் தரப்பான ஜே.வி.பியின் முக்கிய கோரிக்கைகளாகும். ஆனால், கடைசியில் அக்கோரிக்கைகளின் கதி என்னவாயிற்று?

அண்மையில் லண்டனில் வைத்து பி.பி.சியின் தமிழோசை நிகழ்ச்சிக்கு ஜனாதிபதி வழங்கிய பேட்டியில் நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றும் எண்ணமெதுவும் அரசுக்குக் கிடையாதெனத் தெரிவித்திருந்தார்.

**சம்பூர் படை நடவடிக்கை ஏற்படுத்திய சலசலப்பு**

விடுதலைப் புலிகள் அமைப்புக் கூட தமது இராணுவ நடவடிக்கைகளின்போது போர்நிறுத்த உடன்படிக்கை இன்று பயனற்ற ஆவணம் போன்றாகியுள்ளதாக தெரிவித்து வருகின்றனர். சம்பூர் மீதான பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளின்போது, அரச படைகள் சம்பூருக்குள் பிரவேசிக்குமானால், தாம் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக விடுதலைப் புலிகள் முதலில் தெரிவித்தனர். ஆனால், அதற்கு இருநாள்கள் கழித்து சம்பூரை அரசபடைகள் கைப்பற்றமுயன்றால் தாம் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிவிடுவோம் எனத் தெரிவித்தனர். சம்பூரை அரசபடைகளிடம் இழந்ததன் பின்னர் அரசு போர்நிறுத்த உடன்பாட்டை மீறியபோதிலும் தாம் ஒருபோதும் போர்நிறுத்த உடன்பாட்டை மீறப்போவதில்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். மாவிலாறுசம்பவத்தின்போதும் விடுதலைப் புலிகள் இதே விதத்தில் கருத்து வெளியிட்டிருந்தனர்.

போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்ள விடுதலைப் புலிகள் கூடப் பின்னடிப்பது இதன் மூலம் தெளிவாகிறது. முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டிலிருந்த பகுதியில் அண்மையில் ஒரு கிலோமீற்றர் வரையானதூரத்தை பாதுகாப்பு படையினர் கைப்பற்றிய பின்னரும், விடுதலைப் புலிகள் தாம் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில், போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றங்கள் மேற்கொள்ளவோ, அன்றேல் அதனை முற்றுமுழுதாக மாற்றியமைக்கவோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இயலாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஆனால், ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் தமது வழமையான குற்றச்சாட்டை மேற்கொண்டு வருகின்றன. போர்நிறுத்த உடன்பாட்டை இரத்துச்செய்து, நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றுவது மஹிந்த சிந்தனை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனை எனவும் இவ்விரு கட்சிகளும் தெரிவித்து வருகின்றன. அதுமட்டுமன்றி, இத்தகைய நிபந்தனையை நிறைவேற்ற இயலாதுவிட்டால் ஜனாதிபதித் தேர்தலொன்றை சந்திக்க நேருமெனவும் அக்கட்சிகள் சவால் விடுத்து வருகின்றன. முட்டுக்கட்டையின் உதவியின்றி முடிந்தால் தனித்து ஆட்சியைக் கைப்பற்றுமாறும் இவை ஜனாதிபதிக்கு பகிரங்கமாக சவால் விடுத்து வருகின்றன.

**உடன்பாட்டில் ஒரு ரோமத்தையேனும் பிடுங்கும் சக்தி ஜே.வி.பிக்கோ உறுமயவுக்கோ இல்லை!**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலம் முதல், இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இவ்வித பகிரங்கச் சவால் விடுக்கும் அளவுக்கு செயற்படும் இக்கட்சிகளது நடவடிக்கைகளை ஆழ்ந்து அவதானிக்கும்போது போர் நிறுத்த உடன்பாட்டைக் கைவிடச்செய்யவோ, அல்லது அதில் மாற்றங்களை மேற்கொள்ள வைக்கவோ மட்டுமன்றி அதன் ஓர் உரோமத்தைக் கூட நீக்கவைக்கும் சக்தி இவ்விரு கட்சிகளுக்கும் கிடையாது என்பது தெளிவாகிறது. ஆதலால் வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாதுவிட்டால் தேர்தலொன்றை நடத்துமாறு இக்கட்சிகள் தற்போது கோரத் தலைப்பட்டுள்ளன. சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை மீறிச்செயற்பட இயலாத நிலை காரணமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிச் செயற்பட இயலாதுள்ளது. அமெரிக்காவுக்குச் சென்றாலும் போர்நிறுத்த உடன்பாட்டை உரியவகையில் கடைக்கொள்ளுமாறு அமெரிக்கா ஜனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை தெரிவிக்கின்றார். அண்டை நாடான இந்தியாவுக்குச் சென்றாலும் கூட இந்தியாவும் அதேவிதமான ஆலோசனையையே வழங்குகின்றது. இத்தகைய நிலையில் போர்நிறுத்த உடன்பாட்டை கைவிடுவதோ அல்லது அதில் மாற்றங்களை மேற்கொள்வதோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலேசானதொன்றல்ல. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகிய கட்சிகள் ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ மூலம் போர்நிறுத்த உடன்பாட்டைக் கைவிடவைக்கச் செய்யும் நோக்குடனேயே செயற்படுகின்றன. அவர்களது நோக்கம் வெறும் கானல் நீர் என்பது தற்போதைய நிலையை அவதானிக்கையில் தெளிவாகப் புலப்படுகின்றது. ஆதலால் போர் நிறுத்த உடன்பாடு இன்று வெறும் கடதாசி ஆவணமானபோதிலும் 1978ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உருவாக்கிய அரசமைப்பு போன்று எந்த வகையிலும் அசைத்துவிட இயலாத ஆவணமாக ஆகியுள்ளது. நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி ஜே.ஆரின் அரசமைப்பு விதிகளுக்கமையவே நாட்டின் நிர்வாகம் இடம்பெற்றாக வேண்டியுள்ளது. அதில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் இதுவரை எத்தனையோ பேர் ஈடுபட்டிருந்தாலும் அதில் எவராலும் வெற்றியடைய முடியவில்லை. கடந்த 30ஆண்டுகள் காலமாக ஜே.ஆரின் அரசமைப்புக்கு அமைய அரச நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேபோல போர் நிறுத்த உடன்பாடு கூட 2002ஆம் ஆண்டு முதல் இற்றைவரை பயன்பாட்டில் இருந்து வருகிறது. முறையாக செயற்படுத்தப்பட்டோ அல்லது முறையாகச் செயற்படுத்தப்படாத விதத்திலோ சரி போர்நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்து ஐந்து ஆண்டுகாலத்தைப் பூர்த்தி செய்யும் வேளை அண்மித்து வருகிறது. ஜே.வி.பி. எந்த அளவுக்கு கூப்பாடுபோட்டாலும் கூட போர் நிறுத்த உடன்பாடு, ஜே.ஆரின் அரசமைப்புப் போன்று மாற்றமேதுமின்றித் தொடர்ந்தும் புழக்கத்தில் இருந்து வருகின்றது. போர்நிறுத்த உடன்பாட்டால் பெரிதாக நன்மையேதும் கிட்டிவிட வில்லை என்பதுபோன்றே அதன்மூலம் பலாபலன் எதுவும் கிட்டிட வில்லை எனவும் கூற இயலாதுள்ளது. அந்த வகையில் தற்போது போர் நிறுத்த உடன்படிக்கை மேற்குறிப்பிட்ட உண்மைகளை நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் நிரூபித்துக் காட்டியுள்ளது. ஆதலால் விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அரசதரப்பு என்பவை தமக்குத் தேவையாயுள்ள எந்தவொரு விடயத்தையும் சிநேகபூர்வமாகவோ அன்றி கருத்து முரண்பாட்டின் மூலமோ பெற்றுக்கொள்ள உகந்த மார்க்கமாக இந்தப் போர்நிறுத்த உடன்பாடு அமைந்து காணப்படுகிறது.

**தமிழில்: ராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கழுகுக்கண்ணோடு இலங்கையை அவதானிக்கிறது சர்வதேச சமூகம்!

பிறக்கும் இந்த வாரத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மூன்று வெளிநாட்டுப் பிரமுகர்கள் இலங்கை வருகிறார்கள்.

அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களப் பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் தலைமையிலான குழு இவ்வாரம் வருகின்றது.

"இலங்கையில் போர் நடவடிக்கைகளை உடனே நிறுத்தச் செய்யவும் அமைதிப் பேச்சுக்களுக்கான அமெரிக்காவின் ஆதரவை வெளிப்படுத்தவும் ரிச்சர்ட் பௌச்சர் இலங்கை வருகின்றார்" - என அமெரிக்கத் தூதரகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேசமயம், எதிர்வரும் 28,29ஆம் திகதிகளில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுவிற்ஸர்லாந்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அமைதிப் பேச்சுக்களுக்கான முன் ஒழுங்குகளைக் கவனிக்க அனுசரணைத் தரப்பான நோர்வேயின் விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவர் இன்று கொழும்பு வருகிறார்.

அதேவேளை, அமைதி முயற்சிகளை முன்நகர்த்தும் எத்தனமாக இலங்கை சமாதான விவகாரங்களுக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியும் இன்று இலங்கை வரவிருக்கின்றார்.

உத்தேச அமைதி முயற்சிகளை உந்தித் தள்ளுவது இந்தப் பிரமுகர்களின் இலங்கை விஜயத்தின் அடிப்படை நோக்கம் என்று கூறப்பட்டாலும், உண்மையில் உத்தேச அமைதிப் பேச்சுக்களுக்கு குந்தகமாகக் களத்தில் இடம்பெறக் கூடிய யுத்தங்கள் வெடித்து விடாமல் தடுப்பதே அவர்களின் வருகையின் பிரதான இலக்காகும்.

பேச்சுக்கு இரு தரப்புகளும் இணங்கி அதற்கான திகதி நடைபெறும் நாடு ஆகியன குறித்தொதுக்கப்பட்டு, பூர்வாங்க ஏற்பாடுகளும் நடைபெற்றுவரும் சமயத்தில், களத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் மோசமான யுத்தம் இடம்பெற்று வருவது சர்வதேச சமூகத்தை எரிச்சலடையவும் விசனமுறவும் வைத்திருக்கின்றது.

அதுவும் -

சமாதானப் பேச்சுக்கு இணங்கிய நிலையில், அதற்குத் ஏதுவான சமரச நிலையைத் தோற்றுவிப்பதை விடுத்து இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு தமிழர் தாயகத்தின் மீது திணிக்குமானால் அமைதிப் பேச்சில் பங்கு பற்றுவது தொடர்பாக தமது முடிவை மீள்பரிசீலனை செய்ய நேரிடும் என்று புலிகள் அறிவித்துள்ள பின்னணியில், களமுனைகளில் யுத்தங்கள் வெடிப்பது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்துவதோடு அமைதி முயற்சிகளையே அடியோடு சீர்குலைத்துவிடும் என சர்வதேச சமூகம் அஞ்சுகின்றது.

இதன் காரணமாகவே அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற இணைத் தலைமை நாடுகள் மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம், யுத்தத்தை முழுமையாக நிறுத்தி அமைதிப் பேச்சின்பால் தளராத ஈடுபாட்டைக் காட்டுங்கள் என்று தொடர்ந்து இரு தரப்பையும் வலியுறுத்தி நிற்கின்றன.

இந்த வலியுறுத்தல்கள், வற்புறுத்தல்களுக்குப் பின்னரும் களமுனை யுத்தம் ஓய்வதாக இல்லை. ஒரு தரப்பின் வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளுக்கு எதிராகப் பதில் தாக்குதல்களை - தற்காப்புத் தாக்குதல்களை - மட்டுமே தாங்கள் மேற்கொள்கின்றனர் என அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினருமே மாறி மாறி ஆளாளுக்குக் குற்றம் சுமத்திக் கொண்டு களமுனை மோதல்களைத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

இந்த வரிசையில் ஆகப் பிந்திய - மிக மோசமான - யுத்தம் கிளாலி, முகமாலை, நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில் கடந்த புதன்கிழமையன்று இடம்பெற்றிருக்கின்றது.

புதனன்று அந்த யுத்தத்தை யார் தொடங்கினார்கள் என்பது பற்றி பல தரப்புகளிலும் பல்வேறு விதமான செய்திகள் வெளியிடப்பட்டாலும், அமெரிக்கா போன்ற மேற்குலக - நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட - வான்வழி உளவுகள் மூலம் துல்லியமாக விடயங்களைக் கண்டறியக் கூடிய - நாடுகளுக்கு உண்மை ஒன்றும் தெரியாத, புரியாத அம்சமல்ல. இது விடயத்தில் இரு தரப்பு இராணுவப் பேச்சாளர்களினதோ அல்லது பிரமுகர்களினதோ தகவல்களில் மட்டும் தங்கியிருக்கும் அறிவிலிகள் அல்லர் அந்த நாடுகளின் அதிகார வர்க்கத்தினர்.

புதன்கிழமைத் தாக்குதலுக்கு பிரமாண்டமான முன் ஆயத்த ஏற்பாடுகளைச் செய்தவர்கள் யார், தாக்குதலை ஆரம்பித்து அடுத்த தரப்பின் பிரதேசத்துக்குள் நுழைந்து யுத்தத்தைத் தொடுத்தவர்கள் யார், வாங்கிக் கட்டியவர்கள் யார் என்பனவெல்லாம் மேற்குலகுக்கு நன்கு தெரிந்த விடயங்கள்.

அமைதிப் பேச்சுக்கான வாய்புக் கருக்கட்டியிருப்பதால் இத்தகைய வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டாம் என சர்வதேச சமூகம் சம்பந்தப்பட்ட தரப்புகளை உயர் மட்டத்தில் நேரில் வலியுறுத்திய பின்னரும் முகமாலை - கிளாலி முன்னரங்கில் இத்தகைய படு மோசமான யுத்தம் இடம்பெற்றிருப்பது சர்வதேச சமூகத்தை - குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குல நாடுகளை - சீற்றமுறவைத்திருப்பதாகத் தகவல்.

அந்தச் சீற்றத்தையும், விசனத்தையும் ஆதங்கத்தையும் சம்பந்தப்பட்ட தரப்பின் தலைமைக்கு நேரில் தெரிவிக்கவும், இதேபோன்ற வலிந்த தாக்குதல் எத்தனங்களை பேச்சு முயற்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டாம் என எச்சரிக்கவும் சர்வதேச சமூகம் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்க உயர் மட்ட அதிகாரியின் இலங்கை விஜயம், இராஜதந்திர ரீதியிலும் வேறு வழிகளிலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மேற்குலகம் அனுப்பும் செய்திகள், தகவல்கள் என்பன இந்த நிலைமையையே பிரதிபலிக்கின்றன.

இலங்கை விவகாரத்தை சர்வதேச உலகம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது.

அறிவிப்புகள், அறிக்கைகள், ஊடக மாநாடுகள், பத்திரிகையாளர் செவ்விகள் ஆகியவை மூலம் பொது மக்களை திசைதிருப்புவது போல, சர்வதேச சமூகத்தை ஏமாற்றிவிட முடியாது. திசைதிருப்பிவிட முடியாது.

அரசியல் தலைவர்களுக்கு இது புரிந்தால் நல்லது.

அரசியல் சித்து விளையாட்டுக்காக யுத்தங்களை ஏவிவிடும் சராசரி அரசியல்வாதிகள் சர்வதேசத்தின் நியாயாதிக்க வலிமையை உணராமல் இருப்பது வேடிக்கைக்குரியது.

# உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுவோருக்கு இரண்டு மாதங்களாக கொடுப்பனவு இல்லை

## உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி அமைச்சருக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.15

குடாநாட்டில் உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுவோர் கடந்த இரு மாதங்களாக ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இது விடயத்தில் உடன் தலையிட்டு கொடுப்பனவு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

இதுவிடயமாக, குறிப்பிட்ட சம்மேளனம் அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்குரிய வவுச்சர்கள் கிடைத்துள்ளன. இந்தக் கொடுப்பனவை அவர்கள் பெறுவதற்கான அறிவுறுத்தல்கள் இதுவரை வங்கிகளுக்குக் கிடைக்கவில்லை.

இதனால் அவர்கள் தினமும் வங்கிகளுக்குச் சென்று திரும்ப வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே, அவர்கள் ஓய்வூதியத்தை உடன் பெற ஏற்பாடு செய்யவேண்டும். ஓய்வூதியப் பணிகளை பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்த எடுக்கப்பட்ட முடிவு யாழ். மாவட்டத்தில் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாகவே ஓய்வூதியர்கள் உரிய நேரத்தில் கொடுப்பனவை பெறமுடியாதுள்ளது. - என்று அதில் உள்ளது. (1)

# பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு இன்று பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்களாகப் பணிபுரிபவர்களுக்கு இன்று பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இவர்களின் மோட்டார் சைக்கிள்களுக்கு 500 ரூபாவுக்கும், வாகனங்களுக்கு ஆயிரம் ரூபாவிற்கும் பெற்றோல் வழங்கப்படவிருக்கின்றது.

குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் எரிபொருள் பங்கீட்டு அட்டையில் அவர்கள் பதவிநிலை உத்தியோகத்தர் என்று அந்தந்தப் பிரதேச செயலாளர்கள் உறுதி செய்திருக்க வேண்டும்.

இந்தப் பணிக்காக சகல பிரதேச செயலர்களும் இன்று தமது அலுவலகங்களில் பிரசன்னமாக இருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம், அளவெட்டி, மல்லாகம், பண்டத்தரிப்பு, அச்சுவேலி, நெல்லியடி, வேலணை, பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம், கைதடி ஆகிய ப.நோ.கூ.சங்கங்களின் எரிபொருள் நிலையங்களிலும்-

சண்டிலிப்பாய் செ.உதயகுமார், திருநெல்வேலி குகன், ஜெயதேவா, மாக்பெட் ஆகிய எரிபொருள் நிலையங்களிலும் - பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட எந்தவொரு எரிபொருள் நிலையத்திலும் இவர்கள் பெற்றோலைப் பெறமுடியும் என்றும்-

ஏனையோருக்கான பெற்றோல் விநியோகம் தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

# மானிப்பாய், பண்டத்தரிப்பு கிளைகளில் 4ஆம் கட்ட உலர் உணவு விநியோகம்

வலி.தென்மேற்கு, ஒக்.15

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்கங்களில் பணத்திற்கான 4ஆம் கட்ட உலர் உணவு பொருள்கள் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் -

இப்பொருள்களை நாளையதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

பங்கீட்டு அட்டைக்கு அரிசி, கோதுமை மா, சீனி,பருப்பு ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன என்றும் -

ஏனைய பொருள்களும் படிப்படியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (135)

# பல்கலை. அனுமதிப் படிவம் நாளை யாழ்.வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஒக்.15

பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் பெரும்பாலும் நாளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படலாம் என அந்தப் படிவங்களை விநியோகிக்கும் முகவரான யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையினர் தெரிவித்துள்ளனர்.

விமானம் மூலம் அந்தப் படிவங்களை எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

நாளை படிவங்கள் இங்கு வந்து சேரும் பட்சத்தில் நாளைமறுதினம் விநியோகம் ஆரம்பமாகும் என்றும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு யாழ்ப்பாணத்தில் 5ஆயிரத்து 600 மாணவர்கள் தகுதிபெற்றுள்ளமை தெரிந்ததே. (1-203)

# அயடீன் கலக்காத உப்பு வடமராட்சியில் விற்பனை

## திடீர் பரிசோதனையில் கண்டுபிடிப்பு

கரவெட்டி, ஒக்.15

வடமராட்சிப் பிரதேசத்தில் கொழும்பு நிறுவனம் ஒன்றின் பெயர் பொறிக்கப்பட்ட பைக்கட்டுகளில் பொதி செய்து விற்பனை செய்யப்பட்ட அயடீன் கலக்காத உப்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பைக்கட்டுகளில் அயடீன் கலந்த உப்பு என்று குறிப்பிட்டுள்ள போதிலும் உப்பில் அயடீன் கலக்கப்படவில்லை.

வடமராட்சி சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வுகளின் போதே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அயடீன் கலக்காத உப்பு உற்பத்தி செய்தவர்களைத் தேடிய போது அவர்கள் இடம்மாறிவிட்டனர் என்றும்-

அவர்களைப் பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வடமராட்சி சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்தினர் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தற்போது நிலவும் உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டை சாதகமாகப் பயன்படுத்திய சிலர் வல்லையில் விளைந்துள்ள உப்பை கொழும்பு நிறுவனம் ஒன்றின் பெயரில் பைக்கற்றுகளில் அடைத்து வடமராட்சியில் விற்பனைக்கு விட்டுள்ளனர் என்றும் -

எனவே மக்கள் மேற்படி அயடீன் கலக்காத - சுகாதாரச் சீர்கேடான உப்பைப் பாவனைக்கு கொள்வனவு செய்ய வேண்டாம் என்று - வடமராட்சி சுகாதார பரிசோதகர் பிரிவினர் கேட்டுள்ளனர். (70-203)

# மானிய விலையில் உரம் பெற்றுத் தரக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஒக்.15

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனப் பிரிவில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள சம்மேளன உறுப்பினர்களான 126 விவசாயிகள் தமக்கு உரமானிய திட்டத்தின் கீழ் மானிய விலையில் உரத்தை பெற்றுத் தருமாறு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களின் விண்ணப்பப் படிவங்கள் சிபார்சு செய்யப்பட்டு உடுவில் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தருக்கு கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.மா.க. முதலியார் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இதேவேளை - மேட்டுப் பயிர்ச் செய்கைளில் ஈடுபட்டிருக்கும் இப்பிரிவைச் சேர்ந்த விவசாயிகள் 38 பேர் தமக்கு மண்எண்ணெய்யை பெற்றுத் தருமாறு விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நெற்காணி இடாப்பில் பதிவு செய்வதற்காக தாங்கள் செய்கை பண்ணும் நெற்காணியின் உறுதி பிரதியுடன் 42 விவசாயிகள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் - இவைகள் சிபார்சு செய்யப்பட்டு உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (135)

# உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் மண்எண்ணெய் விநியோகிக்க ஏற்பாடு

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஒக்ரோபர் மாதத்திற்கான 2 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஜே/182 தொடக்கம் ஜே/187 வரையான கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத்திலும்-

ஜே/188 தொடக்கம் ஜே/193 வரையான கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மருதனார்மடம் நிரப்பு நிலையத்திலும் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

அத்துடன் ஜே/194, ஜே/195, ஜே/196, ஜே/197, ஜே/201, ஜே/202 பிரிவுகளுக்கு கனகராஜா நிலையத்திலும்-

ஜே/203, ஜே/204, ஜே/198, ஜே/199, ஜே/200 பிரிவுகளுக்கு நாகலிங்கம் அம்மன் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும்-

ஜே/205 தொடக்கம் ஜே/211 வரையிலான பிரிவுகளுக்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கு நிரப்பு நிலையத்திலும் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

விவசாய அட்டைக்குரிய மண்எண்ணெயை நாகலிங்கம், கனகராஜா ஆகிய நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

# உதவிப்பணம் கோரியவர்களில் 75பேர் கொடுப்பனவுக்கு தெரிவு

தென்மராட்சி, ஒக்.15

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் கோரி விண்ணப்பித்தவர்களில் 75 பேர் தற்காலிக கொடுப்பனவு பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு ஜனவரி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையிலான கொடுப்பனவு நிலுவையாக வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவுகளுக்குரிய பட்டியலும் காசோலைகளும் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

அத்துடன் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஒக்ரோபர் மாத கொடுப்பனவுப் பட்டியல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் மல்க அஞ்சலி



எமது பிரதம குரு சதாசிவக் கு... கள்
சிவஸ்ரீ யோகீஸ்வர குரு...ள்
(ராஜாதி குருக்கள்)
அவர்களின் பாசமிகு அன்பு மகள்

### யோகீஸ்வரி

அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். சிகிச்சைக்காக மாத்தளை சென்று அங்கு 06.10.2006 இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவு தாங்கமுடியாத அவரின் குடும்பத்தினருக்கு திருநெல்வேலி கிழக்கு தலம்காவல் பிள்ளையார் அடியார்கள் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடைய தலம்காவல் விநாயகரை வேண்டி நிற்கின்றனர்.

**அடியார்கள்**
*தலம்காவல் பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி.*

(54379)

## ஓராண்டு நினைவஞ்சலி

| மடியில் | | மண்ணில் |
|---|---|---|
| 06 - 06 - 1943 |  | 26 - 10 - 2005 |

### திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன்

*திதி: 5.10.2006*

எங்கள் குலவிளக்கான அன்னையே!
அன்பையும் பாசத்தையும் கூட்டிவிட்டு
எங்கு சென்றீர்கள் அம்மா?
எத்தனை நூற்றாண்டு சென்றாலும்
எங்கள் நினைவு அழியாது
சொர்க்கத்திற்கு சென்றடைந்த - உங்களை
ஆத்மா சாந்தி பெற
அல்லல் தீர்க்கும் நல்லூரானை வேண்டுகின்றோம்.

*14, அம்மன் வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(54370)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


STUDY IN SINGAPORE

Choose Your Degree After A/L

**ACADEMIC DISCIPLINES**

- Business & Management
- Business Computing
- Accounting & Finance
- Information Technology
- Marketing
- Mass Communications
- Biotechnology
- Biomedical Sciences
- Communication Management
- Pharmaceutical Management
- Travel & Tourism
- MBA

*Doctorate, Master's, Bachelor's, Diploma & Certificate*

**MDIS**

- Global recognition
- Most modern facilities
- Great job opportunities after graduation
- UK/Australian degrees at half the cost
- Possibility of transfer to UK/ Australia
- Easy Visa
- Friendly staff
- No restriction to work in Singapore after graduation

New
Foundation Degree
(1 ½ years)
in Travel and Tourism
months internship
(with Allowance)
* Terms & conditions apply

*A seminar will be conducted by a Consultant from Singapore on 4th November from 4.30 p.m. onwards at Hotel Renuka, No. 328, Galle Road, Colombo 03. Please call and make your reservation early as seats are limited.*
*Tel: 0773418618*

FOR ADMISSIONS CALL:
077 - 3418618 (Sin/Eng)
077 - 3687767 (Tam/Eng)

*Sri Lanka Representative Office:*
100, Sir Chittampalam A. Gardiner Mw.,
Colombo. 02.
Tel : 011-4 925 664
E-mail : srilanka@mdis.edu.sg
Website : www.mdis.edu.sg

MDIS
founded 1956
Management Development Institute of Singapore
*Where lifelong learning begins*

*Our Distinguished University Partners*
UNIVERSITY OF BRADFORD · OKLAHOMA CITY UNIVERSITY · ECU EDITH COWAN CRICOS IPC03272G · Southern Cross University CRICOS IPC01241G · PRIFYSGOL CYMRU UNIVERSITY OF WALES · MACQUARIE CRICOS IPC00002J · Ottawa University · GRENOBLE Graduate School of Business · University of Sunderland


## சிறுவர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர்தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு டேவிற் வீதியிலுள்ள மன்றத்தின் கலைக்கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பங்காளிகள் முகாமைத்துவ உத்தியோகத்தரான இ. முகுந்தனும் சிறப்பு விருந்தினராக சிறுவர் கலைக்கூடத்தின் முன்னாள் பொறுப்பாசிரியர் திருமதி அஞ்சலா அல்போன்சும் கலந்துகொள்வர். (202)

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




### லாவண்யா

கைதடி மேற்கைச் சேர்ந்த
**சுரேந்திரன்-ஜீவராணி**
தம்பதியரின் செல்வப் புதல்வி
**லாவண்யா**
தனது மூன்றாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். லாவண்யாவை நீர்கொழும்பு அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, சித்தப்பா, மாமா, மாமி, மச்சாள், டென்மார்க் பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், கனடா சித்தி, சித்தப்பா, அண்ணன்மார், லண்டன் சித்தி, சித்தப்பா, கைதடி அம்மம்மா, பாட்டி, பெரியமாமா, அத்தை, மச்சாள், அத்தான், சித்தப்பாமார், சித்திமார், அண்ணா, அக்கா, கிருபா அன்ரி ஆகியோர் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

| க.நாகராசா, கதிரொளி வீடியோ, கைதடி. | தகவல்: கமலம் (அம்மம்மா), கைதடி. |
|---|---|

(54302)


# A life time chance



## Doctor of Medicine Degree

**கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வெளிப்படும்**
**தகுதிபெற்ற ஒரு மருத்துவ டாக்டராகுங்கள்**

### விட்டெப்ஸ்க் மாநில மருத்துவ பல்கலைக்கழகம்

1988இல் இருந்து இலங்கை மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

அமெரிக்கா, ஐக்கியராஜ்யம், அயர்லாந்து, இத்தாலி, ஜேர்மனி, லக்ஸம்பேர்க், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் உலகம் முழுவதும் 124 இற் மேலான நாடுகளின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் பெற்றது.

WHO *பட்டியலுக்குள்ளான எந்த பாடசாலையிலிருந்தும் மாற்றம் பெறலாம்.*

**பிரவேச விசாவுக்கு உத்தரவாதம்**

அழைப்புகள், அனுசரணைக் கடிதம், வங்கி அறிக்கைகள், விசா நேர்முகம் தேவையில்லை

**PATHE இற்கு விண்ணப்பித்ததன் பின்னர் 20 நாள்களில் உள்வாங்கலும் விசா வசதியும் கல்விக்கான கடன் ஏற்பாடு 5 நாள்களில், இலவச தங்குமிடம், இணையம், பொழுதுபோக்கு, நூலகம், பாடப் பயிற்சிகள், பரீட்சைக் கட்டணம்.**

வழங்கப்படும் பட்டம் எம்.பி.பி.எஸ். ஐ விட உயர்வானது.
கோடை விடுமுறைக்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கியராஜ்யம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் சென்று பகுதிநேர தொழில்செய்ய வாய்ப்பு.

*ஏற்கனவே படித்துக்கொண்டிருக்கும் மற்றும் இலங்கை மருத்துவமனைகளில் உயர் நிலையில் பணிபுரியும் பட்டதாரிகளுமான 100 இற்குமேற்பட்ட இலங்கையர்களைச் சந்திக்கலாம்.*

பிரவேசத்திற்கு தொடர்புகொள்க: டாக்டர் பக்தசீலன் - 0773017883

**PATHE ACADEMY**
Overseas Student Placement Department
37, School Lane (Entrance from Duplication Rd.,) Colombo 03
Tel:- 5377752, 2502012,2591271


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான
# அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி
# நினைவுச்சுடர்

## விழிப்புலனற்றோரை ஒன்று திரட்டி அவர்கள் வாழ்வில் ஒளியூட்டியவர்



விழிப்புல வலுவிழந்தவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டி ஒளியூட்டுகின்ற உன்னத பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அன்னை செல்வி சின்னத்தம்பி அவர்கள் 1937ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி மாவையம் பதியிலே திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் கனிஸ்ர புத்திரியாகப் பிறந்தார். பாடசாலைக் கல்வியை அவர் நிறைவு செய்தபோது ஆசிரிய சேவை அவரை உள்ளீர்த்துக் கொண்டது. பெருவிருப்போடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் சேவையில் அவர் இணைந்து கொண்டார். அவரது ஆரம்ப சேவைக்காலம் சாதாரண மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதாகவே இருந்தது.

விழிப்புலனற்றவர்களுக்கு அறிவொளி ஊட்டுகின்ற பணிக்கு அவர் எவ்வாறு தன்னை உட்படுத்திக்கொண்டார் என்பது தொடர்பாக எழுதிய குறிப்பு ஒன்றில், பார்வை இழந்த மாணவர்கள் அவர் கற்பித்த பாடசாலைகளில் கல்வி கற்பதைப் பார்த்து, தனித்திருக்கும் வேளைகளில் பார்வையற்றவர்களின் நிலையினை உணர்ந்ததன் விளைவாக இப்பணியின்பால் எனது ஈடுபாடு குவிந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

1972ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித் திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததன் பயனாக பார்வையற்ற மாணவர்களும் சாதாரண பாடசாலைகளில் இணைந்து கற்கும் வாய்ப்புக் கிட்டியது. யாழ்ப்பாணத்தில் இத்திட்டத்தினை முழு அளவில் செயற்படுத்துவதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துத் தனது பணியைத் தொடர்ந்தார்.

அன்னை அவர்கள் இப்பணியை இங்கு கையேற்றபோது சமூக சூழலில் 'விழிப்புலன்' அற்றவர்கள் மட்டில் சிக்கலுக்குரியதாகவும் போதிய விழிப்புணர்விற்கு உட்படாததாகவும் இருந்தது. இந்நிலையில் இவர் பல்வேறு தளங்களில் தனது பணிக்கான முனைப்புகளை மேற்கொள்ள வேண்டி இருந்ததை உணர்ந்துகொண்டார்.

பாடசாலைகளில் இணைக்கப்படும் விழிப்புலனற்ற மாணவர்களின் கல்வித் தேவைக்கு உதவியதோடு பாடசாலையில் இணைக்கப்படாத பிற விழிப்புலனற்றவர்களையும் தேடி அவர்களையும் கல்விச் சூழலில் இணைக்கின்ற பணியையும் மேற்கொண்டு வந்தார். விழிப்புலனற்றவர்களைப் பாடசாலைகளில் புதிதாக இணைக்க முயன்றபோது சமூகத்தின் பல தளங்களிலும் இவர் ஊடாட வேண்டியிருந்தது. அதன்போது எழுந்த பிரச்சினைகளை எல்லாம் எதிர்கொண்டு மாணவர்களைப் பாடசாலைகளில் இணைத்து அந்த மாணவர்கள் சமூக நீரோட்டத்தில் கலப்பதற்குப் பெரும் உறுதுணையாக இருந்தார்.

பாடசாலைப் பணி தொடர்ந்து கொண்டிருந்த காலப்பகுதியிலேயே தனது பணி மேலும் கூர்மைப்படுத்தப்படவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டார். சமூகத்திற்கும் விழிப்புலனற்றவர்களுக்கும் இடையிலான ஒருவித அந்நியத் தன்மை களையப்படவேண்டும். இத்தகையவர்களும் சமூகத்தில் ஓர் அங்கம் என்ற ஏற்புணர்வு சமூகமட்டங்களில் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் விழிப்புலனற்றவர்களின் வாழ்வு முழுமையும் செம்மையும் அடையும் என அவர் திடமாக நம்பினார்.

சமூகத்தோடு விழிப்புலனற்றவர்களை இணைத்தல் என்ற இலக்கை அடைவதற்கு உதிரிகளாக இருக்கும் விழிப்புலனற்றவர்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்குரிய சேவைகளை வழங்குகின்றபோது மேலும் சிறந்த பலன்கள் கிட்டும் என அவர் எண்ணினார். இந்த எண்ணப் பாடானது விழிப்புலனற்றவர்கள் சாதாரண பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்பதற்கும் ஏற்றவாறான இல்லம் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும் என்ற விருப்பு அவருள் பரிணமித்தது. இதன் பலனாக 1988ஆம் ஆண்டு கருவான அந்த எண்ணம் வாழ்வகம் விழிப்புலவலுவிழந்தோர் இல்லமாக தெல்லிப்பழையில் உயிர்பெற்றது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைப்பிரம்பு நாளில் அவரின் ஆத்மாஞ்சலி

இன்று சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகும். வெள்ளைப்பிரம்பு தினமான இன்று எமது வாழ்வக முன்னாள் தலைவர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நிகழ்வும் இடம்பெறுகின்றது.

வெள்ளைப்பிரம்பு என்பது கண்பார்வையற்றவர்கள் சுயமாக நடமாடுவதற்கு உதவுகின்ற ஒரு சாதனம் ஆகும். இவ் வெள்ளைப்பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக சர்வதேச ரீதியாகவும் சட்டரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைப்பிரம்புடன் செல்லும் ஒருவர் நிச்சயமாக பார்வையற்றவர் அல்லது மிகக் குறைந்த பார்வையுடையவர் என்பதை நாம் ஐயத்துக்கிடமின்றி உணர்ந்துகொள்ளமுடியும்.

1931ஆம் ஆண்டு அமெரிக்க இலினோய் மாவட்டத்திலுள்ள பியேரிரியா என்னுமிடத்திலுள்ள அரிமாக் கழகத்தின் முயற்சியால், வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாகச் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உலக நாடுகள் ஒவ்வொன்றும் இதனை ஏற்றுக்கொண்டன. 1969ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதியை சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

வெள்ளைப்பிரம்பு தினமானது இருபெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படுகின்றது.

1. வெள்ளைப்பிரம்பு பற்றியும் அதன் சர்வதேச ரீதியிலான, சட்டரீதியிலான அங்கீகாரம் பற்றியும் அதனைத் தாங்கிக் கொள்வோருக்குள்ள உரிமைகள் பற்றியும் எடுத்துக்கூறுவதன் மூலம் வீதியில் செல்லும் விழிப்புலனற்றோருக்குப் பாதுகாப்பை, தேவையானபோது உதவி ஒத்துழைப்புகளைப்பெற்றுக்கொடுத்தல்.

2. பார்வையற்றவர்களும் இப்பாரில் மகிழ்ச்சியுடன் கௌரவத்துடன் வாழமுடியும் என்பதையும் அவர்கள்பல்துறைகளிலும் பிரகாசிக்கமுடியும் என்பதையும் சமூகத்திற்கு உணர்த்துதல் இதன்மூலம் வீடுகளில் முடங்கியிருக்கும் பார்வையற்றவர்கள் வாழ்வில் முன்னேற வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

இதன் அடிப்படையில் பார்வையற்றவர்களை வெறுமனே வீட்டில் வைத்திருக்காது அவர்களது எதிர்காலத்திற்காக அவர்களுக்கென உதவும் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உழைத்தவர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி.

வெள்ளைப்பிரம்பு தினமான இன்று அவரை நினைவு கூருவேமாக.

- ஆ.ரவீந்திரன்

## இன்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது வாழ்வகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வாழ்வக இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டுப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் இணைந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

- வாழ்வக சமூகம்.

## நன்றிகள்

எமது வாழ்வகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான அன்னை செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் திடீர் மறைவால் நாம் துயருற்றிருந்த வேளை, ஓடோடி வந்து எம் துயரத்தில் பங்கு கொண்டதோடு, வேண்டிய உதவி, ஒத்தாசைகள் அனைத்தையும் வழங்கிய அனைத்து அன்புறவுகளுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், தொலைபேசி மூலமாகவும் தந்திகள், கடிதங்கள் மூலமாகவும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் துயர் பகிர்ந்த அனைத்து உறவுகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் அனுதாபச் செய்திகள் வெளியிட்ட பெரியார்கள், அன்பர்கள் அனைவருக்கும் ஊடகங்களுக்கும் எமது நன்றிகள்.

அன்னையின் அடிச்சுவட்டில் வாழ்வகத்தின் பணிகள் தொய்வேதுமின்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தவகையில் அனைவரது அன்பையும் ஆதரவையும் தொடர்ந்தும் நாடி நிற்கின்றோம்.

இவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவரை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லதற்கு அம்புலன்ஸ் உதவி வழங்கிய செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-வாழ்வக சமூகம்.

தலைவர்:
ஆ.ரவீந்திரன்
(விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியற்கல்லூரி)

செயலாளர்:
அ. இராமநாதன் (ஜே.பி)
(ஓய்வு பெற்ற சமூக சேவை உத்தியோகத்தர்)

பொருளாளர்:
பொ.கமலநாதன்
(அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

## அன்னை அவர்களால் ஆளாக்கப்பட்டோர்

01) அமரர் திருமதி மங்களராணி சுப்பிரமணியம் பீ.ஏ. (ஆசிரியர்) - வடக்கு கிழக்கிலிருந்து உதயமான முதலாவது விழிப்புலனற்ற பட்டதாரி என்ற பெருமைக்குரியவர். இணையற்ற இல்லத்தரசியாய் இரண்டு பிள்ளைகளின் அன்னையாய் வாழ்வாங்கு வாழ்ந்தவர். எழுத்துத் துறையிலும் மெல்லிசைத் துறையிலும் தன் தடங்களைப் பதித்துள்ளார்.

02) திரு.வொட்ஸ்வேத் பீ.ஏ. (விரிவுரையாளர், விபுலானந்த இசை நடனக் கல்லூரி, மட்டக்களப்பு.)

03) திரு.பி.கே.பகீரதன் பீ.ஏ.

04) திருமதி ஜோதீஸ்வரி பிரபாகரன் பீ.ஏ. (கனடாவில் வசிக்கிறார்)

05) திரு.ஆ.ரவீந்திரன் (பீ.ஏ., டிப்.இன்.எட்.எம்.ஈடி. - விரிவுரையாளர், தேசிய கல்விக் கல்லூரி, கோப்பாய்.) - அன்னையின் அடிச்சுவட்டில் வாழ்வகத்தை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

06) செல்வி ரஞ்சினி விஜயரட்ணம் பீ.ஏ. (ஆசிரியர்)

07) பா.ஸ்ரீகமலன் எம்.ஏ. (கனடாவில் வசிக்கிறார்)

08) திரு.ஆ.பரமேஸ்வரன் பீ.ஏ. (கலாசார உத்தியோகத்தர், மட்டக்களப்பு.)

09) திரு.ர.கௌரிசன் (குனியார் நிறுவன உரிமையாளர், யு.கே.)

10) திருசாள்ஸ் ராஜகுமார் பீ.ஏ. (அரச உத்தியோகத்தர், கொழும்பு.)

11) திரு.நா.இதயராஜன் பீ.ஏ., டிப்.இன்.எட். (ஆசிரியர், மட்டக்களப்பு).

12) திரு.ஆனந்தராசா பீ.ஏ. (ஆசிரியர், கிளிநொச்சி).

13) செல்வி பெனடிக்ரா செபமாலை பீ.ஏ. (ஆசிரியர், மன்னார்).

14) திரு.க.தர்மசேகரம் பீ.ஏ. (யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தற்காலிக விரிவுரையாளர்).

15) திரு.து.ஜசிந்தன் பீ.ஏ. (சமூக சேவை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்).

16) செல்வி நகுலாம்பிகை கந்தர் பீ.ஏ. (சமூக சேவை உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்).

17) திரு.பெ. கமிலஸ் பீ.ஏ.

18) திரு.ஸ்ரனி அற்புதராஜ் (சட்டத்துறை இறுதியாண்டு மாணவன், கொழும்பு.)

19) செல்வி டயானி தேவதாஸ் (கலைப்பிரிவு முதலாம் ஆண்டு மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்).

இவர்களைவிட அன்னையின் அரவணைப்பிலே க.பொ.த. உயர்தரம், சாதாரண தரம் எனப் பல்வேறு மட்டங்களில் பயின்று பலர் பயனடைந்துள்ளனர். இவர்களுள் வாழ்வகம், ஆசிரியர் செல்வி நந்தினிதேவி இரத்தினமும் ஒருவராவார்.

விளம்பர அனுசரணை:-

சகலவிதமான மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள், நீர்க்குழாய் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் விற்பனையாளர்
சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய்.

கட்டடப் பொருள் விற்பனையாளர்கள்
ரஞ்சனாஸ்
மருதடிப் பிள்ளையார் கோவிலடி, யாழ். வீதி, மானிப்பாய்.
(C/51151)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனவரிக்கு முன் 3,179 ஆசிரியர்கள் தோட்டப் பாடசாலைகளில் நியமனம்

கொழும்பு, ஒக்.15

பெருந்தோட்டத்துறைப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதிக்கு முன்னர் மூவாயிரத்து 179 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் எனப் பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் நேற்றுத் தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டின் பாடசாலை முதலாவது தவணை ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. தோட்டப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனத்துக்கென விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் மூவாயிரத்து 179 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவிருக்கிறது என்று அவர் சென்னார்.

(த)

# சிறுவர்களைப் பலாத்காரமாக பிடித்துச் செல்கிறது கருணாகுழு

## அரசு மௌனம் சாதிப்பதாக சுரேஷ் எம்.பி. சீற்றம்

கொழும்பு, ஒக். 14

புலிகள் சிறுவர்களைப் பலவந்தமாக ஆயுதப் பயிற்சியில் இணைத்துக்கொள்வதாக கூப்பாடு போடும் அரசு, இராணுவ முகாம்களுக்கருகே செயற்படும் கருணா குழுவினர் கிழக்கில் வீதியில் விளையாடும் சிறார்களை பலாத்காரமாகப் பிடித்துச் செல்வதைப் பார்த்து வாளாவிருப்பது ஏன்?

- இவ்வாறு கூட்டமைப்பு எம். பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

கிழக்கில் குழந்தைகளைக் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீதியில் விளையாடும் பத்து, பதினொரு வயது சிறுவர்களும் பலாத்காரமாகக் கடத்தப்படுகின்றனர். கடந்த வியாழக்கிழமை மாத்திரம் 35 சிறுவர்கள் பலாத்காரமாகக் கருணா குழுவினரால் கடத்தப்பட்டனர் எனத் தகவல் கிடைத்துள்ளது.

இராணுவ முகாம்களுக்கருகே செயற்படும் கருணா குழுவினரே இக்கடத்தல்களில் ஈடுபடுகின்றனர். பெற்றோர் சென்று அழுது மன்றாடியதால் கடத்தப்பட்ட 35 சிறுவர்களில் 14 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இக்கடத்தல்கள் இராணுவத்தினருக்குத் தெரிந்தே இடம்பெறுகின்றன. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன் இப்படி அவர் கேள்வி எழுப்பினார். (த)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பிரதேச செயலக கலாசார அலுவலரான திருமதி மாலினி கிருஷ்ணானந்தன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் சின்னப்பு இராமலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பதினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
கோப்பாய்.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவர்களும்.

# இடம்பெயர்ந்தவர்களின் நலன்கருதி இன்று இலவச மருத்துவமுகாம்

கல்வியங்காடு, ஒக்.15

தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். அடைக்கல மாதா தேவாலயத்தில் தங்கியுள்ளவர்களின் நலன்கருதி இன்று யாழ். போதனா வைத்தியசாலையின் துறைசார் மருத்துவக்குழுவினரால் விசேட மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் இலவச மருத்துவப்பரிசோதனையும் மருந்து வழங்கலும் இடம்பெறும்.

அத்துடன், நீரிழிவு, இரத்த அழுத்தம், இரத்தப்பரிசோதனை, பொது மருத் துவம், தோல் நோய்கள் போன்றன குறித்து பரிசோதித்து மருந்துகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (79)

# விதைநெல்லுக்காக அலைந்து திரியும் விவசாயிகள்

தென்மராட்சி, ஒக்.15

தென்மராட்சி பிரதேச நெற்செய்கையாளர்கள் விதைநெல்லுக்காக அலைகின்றனர்.

அண்மையில் இப்பிரதேசத்தில் மழை பெய்ததையடுத்து காலபோக நெற்செய்கைக்கான பணிகள் நெல்வயல்களில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் விதைநெல் கிடைக்காததால் பலர் இன்னமும் நெல் விதைப்பு வேலையில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மைய அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு நிலவிய வேளையில் அதிக விலைகளுக்கு நெல்லினை பலர் விற்பனை செய்ததால் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் இதேநிலைமை ஏற்பட்டதால் இவ்வருடம் யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான வயல்களில் நெல்உற்பத்தி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படலாமென நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ப)

# சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை ரூ.3,000 அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.15

நாவாந்துறைப் பகுதியில் சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை செய்தவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வண்ணார்பண்ணை, நாவாந்துறைப்பகுதிப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 40 கிலோ மாட்டு இறைச்சி கடைஒன்றில் விற்பனை செய்யவைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப கடை உரிமையாளர் யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் அந்த நபருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் இறைச்சியைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (1-203)

# விசேட மருந்துகளை விரைவில் கொண்டுவர ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக்.15

நாளாந்தம் பெருமளவில் தேவைப்படும் மருந்து வகைகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கைவசம் உள்ளன.

எனினும் சில விசேட மருந்து வகைகளின் கையிருப்புக் குறைந்துள்ளது. யாழ்.வைத்திய சாலைக்கு ஒதுக்கப்பட்ட மருந்து வகைகள் கொழும்பில் உள்ளதாவும், போக்குவரத்துத் தடை காரணமாக அவற்றை எடுத்து வர முடியவில்லை என்றும் -

இது தொடர்பாக கொழும்பு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு, தாமதத்தை நீக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவை இங்கு எடுத்துவரப்பட்டதும் குறிப்பிட்ட விசேட மருந்துகளின் தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றும் - யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-88)


## A/L Day Class

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

எமது வழமையான ஆசிரியர் குழுவினர்
நாளை ஆரம்பம் 16.10.2006
* யாழ் பொருளியல் கல்லூரியில் காலை 8 a.m
* இணுவில் பொருளியற் கல்லூரியில் காலை 7 a.m
* சித்தன்கேணி BARATHY மாலை 3 p.m

மூன்று இடங்களிலும் அனுமதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

## விற்பனைக்கு

பருத்தித்துறை/தீவகப் பகுதிகளுக்கு நன்கு செயற்படக் கூடிய மோட்டோ ரோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: க.கணேசதாசன்,
சுதுமலை தெற்கு,மானிப்பாய்,
தொ.பே.: 021 222 3206.

## தவறவிடப்பட்டுள்ளது

06.10.2006 வெள்ளிக்கிழமை காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் வரும் 782 வழி இலக்க மினிபஸ்ஸில் வேறு ஒவரிடம் எமது அல்பம் ஒன்று ஒப்படைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இறங்கும்போது திரும்பப் பெறப்படாமல் தவறவிடப்பட்டுள்ளது.அதனை எமக்காக வைத்திருந்தவர் இல.74, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## வீடு, கடை வாடகைக்கு

கல்வியங்காடு, G.P.S வீதியில் வீடு, கடை என்பன வாடகைக்கு உண்டு.

தொடர்பு: S.காண்டீபன்.
G.P.S வீதி
கல்வியங்காடு.
தொ.பே 222 8203

## மணமகன் தேவை

1971இல் பிறந்த உயர்கல்விகற்று இலங்கையில் தொழில்புரியும் விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளில்லாத 5' 7'' உயர இந்துப் பெண்ணுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: தொ.பே : 081 4923982

## வாடகைக்கு

கொழும்பு 12, டாம் வீதி, இல. 361 - 1/1 இல் 1ஆம் மாடி வாடகைக்குக் கொடுக்கப்படும். அலுவலகம்/ ஸ்ரோருக்கு உகந்தது. 2,500 சதுர அடி கொண்ட 3 அறைகள், 3 பாத்றூம், பெரிய ஆபிஸ், 1(Hall), ஸ்ரோர் றூம் என்பன உண்டு.விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Tele. No:-(011) 2431935,
(011) 2473051
(011) 2433900


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு நாகசிறி (குடும்பி)



வேலணை மேற்கை சொந்த இடமாகவும் தற்போது கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய முருகேசு நாகசிறி 13.10.2006 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் நாகேந்திரா (இந்தியா) நாகபாலா, நாககுமரா, நாகதீபன், நாகறஞ்சினி, பத்மறஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயச்சந்திரன், யமுனா, தேவகுமார் ஆகியோரின் மைத்துனரும் சிந்துஜா, திலக்ஷன், திவாகர், நிரூஜா ஆகியோரின் மாமனும், சுமித்திரன், பிரவீணா ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*106(60), கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(54396)*

*தகவல்:*
**சகோதரர்கள்.**

### திருமதி கந்தையா கனகம்மா

வண்ணார்பண்ணை, 221/1 கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரண்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கனகம்மா 13.10.2006 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை கந்தையா (VK) யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தையலம்மா தம்பதியரின் ஆசை மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சுப்பிரமணியம், சுந்தரம்மா, வள்ளியம்மா மற்றும் மார்க்கண்டு (கனடா) ஆகியோரின் இனிய சகோதரியும், கல்யாணி (கொழும்பு) தர்மகுலசிங்கம் (பிரதம பாதுகாப்பு அதிகாரி, இலங்கை, சிமெந்து கூட்டுத் தாபனம்), புவிராஜசிங்கம் (கனடா), இராஜகுலசிங்கம் (கனடா), விஜயகுலசிங்கம்(கனடா), செல்வஜோதி (கனடா) புஸ்பஜோதி (கனடா), Dr.பஞ்சகுலசிங்கம் (நோர்வே), பிரேமஜோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஜீவரட்ணம், நீலயோஜினி (வேம்படி மகளிர் உயர் கல்லூரி) லீலா (கனடா) மணிமேகலை (கனடா) கீதாஞ்சலி (கனடா), Major ரவீந்திரன் (கனடா) சிவந்தன் (கனடா) மொனிக்கா (நோர்வே), இளங்கோ (கனடா) ஆகியோரின் மாமியும் பாமினி, பமிதா, நிரஞ்சன், ஸ்ரீபியா, காஜீத்திரி, தர்சினி, ஜீவித்தா, யாதவன், யாழினி, வைஸ்ணவி, பிரணவன், ராகவி, ராஜ்கண்ணா, அஸ்வினி, ரொஷான், ரொகான், சில்வியா, சிவகாமி, அலெக்ஸ் சாண்டர் சித்தார்த்தர், விக்டோரியா, மேகலா, அகிலன், ஆதிரை, குகன், அரண்ராஜ் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் மகிஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 21.10.2006 சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளளவும்.

*கனடா முகவரி:*
**81, BROOKMILL BLUD**
**#54,**
**SCARBOROUGH,**
**ONG MIW 235,**
**CANADA.**
**416 4992665**

*(51156)*

*தகவல்:*
*க.தர்மகுலசிங்கம் (மகன்)*
*த.நீலயோஜினி (மருமகன்)*
*21, பொன்னப்பா லேன்,*
*யாழ்ப்பாணம்.*
*021 2223141*

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சிவஞானம் கோமேஸ்வரி

**(முன்னாள் எழுதுவினைஞர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம்)**



அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் கோமேஸ்வரி நேற்று (14.10.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் மகேஸ்வரன் ( காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்), திருமதி தனேஸ்வரி லோகநாதன், கமலேஸ்வரி, மோகனேஸ்வரி (காசாளர் - யாழ்.தினக்குரல்), கயல்விழி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ம.ஞானாம்பிகை (ஆசிரியை - சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), லோகநாதன், தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் துரைராஜா (கனடா), கந்தசாமி (ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் - கனடா) ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அம்மன் வீதி,திருநெல்வேலி.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### செல்லத்துரை சுந்தரலிங்கம்

*(இளைப்பாறிய முன்னாள் அதிபர் - இரத்தினேஸ்வரி வித்தியாலயம், பத்தமேனி)*



வளலாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுந்தரலிங்கம் 11.10.2006 புதன் கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) பாசமிகு கணவரும், தயாளன் (U.K.), பாலமுரளி (Canada), நளாயினி(U.K.), காலஞ்சென்ற சிவாந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் சுகிர்தா (U.K.), வாசுகி (கொழும்பு), ஜீவகுமார்(U.K.) ஆகியோரின் அன்பு மாமனும் சாருஜனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் தங்கரத்தினம், நேசரத்தினம், அன்னலட்சுமி, கமலாதேவி காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் மகேஸ்வரி (Canada) சிவலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்- கிளிநொச்சி) சிவபாதமங்கை (U.K.) சிவஞானலட்சுமி (U.K.) காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நவரத்தினம், கனகரத்தினம் மற்றும் சற்குணநாதன், சச்சிதானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரம்சோதியின் (கந்தர்மடம்) சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.10.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி வீதி,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

*289, பல்கலை நகர்,*
*பாலவாக்கம்,*
*சென்னை 41, இந்தியா.*
*தொ.பே.: 0091 9940421358,*
*0091 9840368921*

தகவல்:
சிவயோகம் (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு

15.10.2006

**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியின்**



**பிரதி அதிபர்**

**திருமதி மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்**

ஆசிரியையாய் பிரதி அதிபராய்
இருபத்தேழாண்டுகள் மானிமகளிர் சிறக்க - நற்
சேவைதனை ஆற்றி தனக்கும் மகளிருக்கும்
பெருமைதனை சேர்த்துவிட்ட மணிமேகலையே - இன்று
அறுபது அகவையில் மனமுவந்து வாழ்த்துகிறோம்
சீரும் சிறப்புமாய் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே.

**கல்லூரிச் சமூகம்,**
**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி ,மானிப்பாய்**

சிவமயம்



### வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 14.09.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்த

**அமரர் திருமதி தில்லையம்பலம் சுகிர்தம்**
(ஆச்சி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 15.10.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

சுகிர்தவாசா
கும்பிழாவளை,
அளவெட்டி.

இங்ஙனம்
இளமுருகன் - புஷ்பா (கனடா)
காண்டீபன் (போட்டோ வீடியோ, அளவெட்டி)
உதயகுமார் - யசோதா (UNIT, Jaffna)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி குமாரசாமி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமாரசாமி 09.10.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2006) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தகவல்:**
**சுதுமலை வடக்கு.** (54364) **கனகசபாபதி, தில்லையம்பலம்**
*(மகன்)*

### இராசலிங்கம் இராஜ்மோகன்



மண்டைதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 54/18, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, சுண்டுக்குழியை வதிவிடமாகவும் கொண்ட இராசலிங்கம் இராஜ்மோகன் 12.10.2006 இல் அகால மரணமானார்.

அன்னார் இராசலிங்கம்- காலஞ்சென்ற சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கம்சாவதனியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிற்றம்பலம் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவதேவி, தேவ ராஜாவின் பெறாமகனும் சரவணபவன், லலிதாம்பிகை, சிறி கோபால், கமலராணி ஆகியோரின் மருமகனும் ரவீந்திரராசா, சிவ மணிதேவி, சண்முகராசா, சிவமலர், சுந்தரவடிவேல், சியாமளா (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும் தேவமேனன் (டென் மார்க்), தேவசீலன் (சுவிஸ்), தேவபாலன் (கனடா), தேவகபி லன் (லண்டன்), கிஸ்னமாலா (சுவிஸ்), கிஸ்னவாணி, கிஸ்ன பிரியா, குஜிந்தன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் வித்தியா, கீர்த்திகா, கௌதமி, நிலானி, நிசானி, நிலக்ஷன் ஆகி யோரின் அன்பு மைத்துனனும் தனராஜ், காவிஸ், பிரிந்தாவன், லுகானா, சோபி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2006) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்ப டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*54/18, சந்தனமாதாகோயில் முன்ஒழுங்கை,*
*பாண்டியன்தாழ்வு,*
*கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குழி.*

*தகவல்:*
**ரவீந்திரராசா.**
*(ராசன் - சித்தப்பா)*

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பழைய மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து 2002, 2003 ஆம் ஆண்டுகளில் வெளியேறிய சகல மாணவர்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்திற்கு சமூகம் தருமாறு நிறுவனத்தின் பழைய மாணவர் சங்கம் கேட்டுள்ளது.

குறிப்பிட்ட மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடலுக்காகவே மாணவர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202)

## விளையாட்டு விழா

சுழிபுரம், ஒக்.15

பண்ணாகம் அண்ணா கலை மன்ற சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு அருகில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் க.வே. குமரகுரு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(203)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.15

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் தீவக அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். புனித மரியாள் தேவலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய நிபுணர்களால் மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

மகப்பேறு, தோல், பொது மருத்துவம், இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு ஆகிய பரிசோதனைகள் இம் மருத்துவ முகாமில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம் முகாமில் தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த சகலரையும் கலந்து கொள்ளுமாறு தீவக அரிமாக் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

(202)

**Sanjei Mobile phone Technology**

தமிழ் மொழி மூலமான கற்கைநெறி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஒருவாரத்தில் நீங்கள் ஒரு மொபைல் போன் திருத்துநராகுவதற்கு.
ஆரம்பம் 16.10.2006 9 a.m.
தொடர்புகளுக்கு : **Arul Com**
01, Brown Rd., Jf. 222 3536, 222 3615

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 17 |
| 08 | 09 |
| 1922 | 2006 |

### தாமோதரம்பிள்ளை திரவியம்

*(திதி - 15.10.2006)*

அன்பாய் எமை அரவணைத்து ஆதரவாய்
வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே!
உம் நினைவு எம் நெஞ்சில் என்றும்
மறையவே மறையாது.


இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியத்திலும் (17.10.2006) செவ்வாய்கிழமை நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு இல்லம் நாடிவந்து இறுதிக்கிரியைகளின் போது உதவிகள் செய்தவர்களுக்கும் எமக்கு ஆறுதலும் தேறுதலும் அளித்த அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் தந்தி, தபால், தொலைபேசி மூலமாக எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

32, கண்டி வீதி, கிளிநொச்சி.
E-Mail: djprathesh01@hotmail.com

**குடும்பத்தினர்.**
(54366)

## மரண அறிவித்தல்



### நாகமுத்து தம்பிஐயா

புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் வடக்கு, கரவெட்டி, நவிண்டிலை வசிப்பிடமாகவும் தற்போது இல.117, மனிங் பிளேஸ், கொழும்பில் வசித்து வந்தவருமாகிய நாகமுத்து தம்பிஐயா 13.10.2006 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் திரு. திருமதி நாகமுத்து தங்கம்மா தம்பதியரின் புதல்வனாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (15.10.2006) கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைக்காக இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு தெகிவளை, கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 19 ¾ A அர்த்துசா லேன்,
வெள்ளவத்தை.

(சி-51147)

தகவல்:
த.பிரகாஸ்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

15.10.2006



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட
திரு.திருமதி கிருபாகரன் - அனிதா
தம்பதியரின் செல்வப் புதல்வி

**யனித்தா**

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று பிரான்ஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை ஏழாலையில் உள்ள அம்மம்மா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், கொழும்பில் உள்ள அப்பப்பா, அத்தை, மாமா, மச்சான், மச்சாள், லண்டனிலுள்ள சித்தப்பா, சித்தி, அக்கா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏழாலை வடக்கு ஆலங்காட்டு சித்திவிநாயகர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

செல்வி
கிருபாகரன் யனித்தா

அனிதா வாகன சேவை,
ஏழாலை வடக்கு, ஏழாலை. (54384) தகவல்: அ.மகிந்தன்

# மரண அறிவித்தல்கள்

## ஸ்ரீபன் தங்கம்மா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபன் தங்கம்மா நேற்று (14.10.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீபனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகரட்ணம், தவராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவராணி, தங்கராணி ஆகியோரின் பாசமிகு தாயும் அருளம்மா, சந்திரா (பிரான்ஸ்), சிங்கராசா, காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் மாமியும் லிலிசன் (பிரான்ஸ்), லிலிசா-சற்குண.ராசா, பிறமிளா, அனுஷா, அனிஸ்ரன், சாந்தா - ஜெசிந்தன் (பிரான்ஸ்), கமலினி - சந்திரகுமார் (பிரான்ஸ்), கனிஷ்டன் (பிரான்ஸ்), ஜெயந்தி - சுந்தர்ராஜன், றெனினோல்ட் (கனடா)- வீத்னா, தர்ஷன் (கனடா), தர்சினி, மயூரன், மயூரி, துஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சக்திவேல் (பிரான்ஸ்), நிதுஷா, சஞ்ஜய், சானுகா ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (54393)

தகவல்:
இ.சிங்கராசா
*(மருமகன்).*

## கிருஷ்ணசாமி சத்தியேஸ்வரன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாவும் கொண்ட கிருஷ்ணசாமி சத்தியேஸ்வரன் 13.10.2006 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் கிருஷ்ணசாமி - அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் பாமதியின் அன்புக் கணவரும் பிரசாத், சாம்பவி, வினோத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாதன் - அமரர் சோமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சபாநாதன் (சமாதான நீதிவான்)- தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரன் (இத்தாலி), தருமதேவி, தவமணிதேவி, தயாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும் சரவணபவன், கணநாதன், இராதாகிருஷ்ணன் (ஆசிரியர்), மாலதி ஆகியோரின் மைத்துனரும் அகிலன் (லண்டன்), சாருமதி (கனடா), சுபமதி (எழுதுவினைஞர்), சுடர்மதி (ஆசிரியை) ஆகியோரின் அருமை அத்தானும் தயாநிதி (லண்டன்), சபேசன்(கனடா), பரந்தாமன் (ஆசிரியர்), நவநேசன் (துறைமுக கூட்டுஸ்தாபன பணியாளர்) ஆகியோரின் அருமை அண்ணனுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (54387)

தகவல்:
மு.கிருஸ்ணசாமி (தந்தை)
வி.சபாநாதன் (ஜே.பி-மாமன்)

## ஆறுமுகம் நாகேஸ்வரன்

(எழுதுவினைஞர், சலுசலா)

சடையாளி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (13.10.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் ஆறுமுகம் பாக்கியலட்சுமியின் பெறாமகனும் காலஞ்சென்ற சீவரத்தினம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் அரிகரன், அரிகரசுதன் (மாணவர்கள்-யா/கலாநிதி ஆ.தியாராசா மத்திய மகா வித்தியாலயம் ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் (ராசு), செந்தில்நாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி க.வேதநாயகி, திருமதி செ.கலாசோதி (கீதா - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சடையாளி,
காரைநகர். (54386)

தகவல்:
அரிகரன், அரிகரசுதன் *(பிள்ளைகள்)*
ஆ.செந்தில்நாதன் *(சுவிஸ்)*


## நீரிழிவு DIABETES

- சிறுகுறிஞ்சாப் பவுடர் Gymnema Powder
- 2 டி கோலா 2 D cola

தலைமயிர் நரைத்தல்/உதிர்தல் Hair Gveying/ fallind

- பிபிஜி கெயார் ஒயில் BBG Hair Oil

திராட்சை Grapes

- திராட்சை வைன் Grapewine
- திராட்சை ரசம் Grapejuice

வினாகிரி Vineger

- இயற்கை அரிசி வினாகிரி Natural rice vineger

அச்சா மென்பானங்கள் Achcha Soft drinks

BIO TEC ORIENT
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்


## விழிப்புலனற்றோரை...

*(05பக்கத் தொடர்ச்சி)*

*இந்தக் காலகட்டத்துடனேயே தனது ஆசிரிய சேவைக்காலம் முடியும் முன்பாகவே சேவையிலிருந்த ஓய்வுபெற்று ஓய்வுறக்கமின்றி வாழ்வகத்தின் விருத்திக்காக அயராது உழைத்தார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து, உடுவிலிலும் பின்னர் மானிப்பாயிலும் வாழ்வகத்தை நிர்வகிக்க வேண்டியதாய் இருந்தது. இந்தக் காலகட்டங்களில் எல்லாம் நெஞ்சுறுதியோடு சோர்வில்லாத ஊக்கத்தோடும் விழிப்புலனற்ற பிள்ளைகளின் கல்வி தடையின்றித் தொடர வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அன்னார் கடுமையாக உழைத்தார். அதன் பலனாக இன்று வாழ்வகம் பல விழிப்புலனற்ற பிள்ளைக்கு ஆதரவு அளிக்கும் இல்லமாக - அறிவொளி ஊட்டுகின்ற ஸ்தாபனமாக -மருதனார்மடத்தில் நிரந்தரமாக- கம்பீரப் பொலிவுடன் - நிமிர்ந்து நிற்கிறது.*

*வாழ்வக அன்னை செல்வி சின்னத்தம்பி அவர்கள் பல்பரிமாண ஆளுமைத் திறன்கொண்ட ஒருவர். மிகவும் நெகிழ்வுத் தன்மையான நடத்தைப்பாங்கு இவருக்கு உரியது. வாழ்வகத்தில் இவர் தனக்குரித்தானதாக குறித்த ஒரு பணியைக் கொண்டிருந்தது கிடையாது. ஒருசமயம் அலுவலக நிர்வாகியாகவும் வேறொரு வேளையில் அங்கு வதியும் பிள்ளைகளை அரவணைக்கும் தாயாகவும் சமையலாளராகவும் ஆசிரியராகவும் தன்னை மாற்றிக்கொண்டு ஓயாது பணியாற்றினார். இவரது பணியின் பலனாக வாழ்வகம் இன்று சிறப்பான மேம்பாட்டை அடைந்து விழிப்புலனற்றவர்களுக்கு உயர்ந்த சேவையை வழங்கிக் கொண்டு இருக்கிறது.*

*அன்னை அவர்களின் வழிப்படுத்தலுக்கு உட்பட்ட விழிப்புல வலுவிழந்தவர்கள் சமூகத்தில் இன்று நன்னிலையில் இருக்கிறார்கள். விரிவுரையாளர்களாக, ஆசிரியர்களாக, கலாசார உத்தியோகத்தர்களாக, சமூக சேவை உத்தியோகத்தர்களாக எனப் பல தளங்களிலும் தமது பணிகளை ஆற்றிச் சமூகப் பயன்பாடு உள்ள மனிதர்களாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இன்றும் பலர் புலம்பெயர்ந்த நாடுகளில் சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அன்னாரது இலக்கு இன்று ஈடேறத் தொடங்கி இருக்கின்றது. சமூகத்திலிருந்து விழிப்புலனற்றவர்களை பிரித்துப் பார்க்கும் மனோபாவம் மாற்றங்கண்டு வருவது சிறந்த அறிகுறியாகத் துலக்கமுறுகின்றது. இந்தத் துலங்கலுக்கு அன்னாரது பணியும் பெரும் உந்துசக்தியாக இருந்தது என்பது வெளிப்படை.*

*தனது வாழ்வின் இறுதிநாள்க்ளில் மாணவர்களின் உயர்வுகண்டு பேருவகை கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. தனது பணி பூரணத்துவம் அடந்துவிட்டது என அவர் எண்ணியிருக்கக் கூடும். அதனாலோ என்னவோ அவர் மரணத்தைத் தழுவிக்கொண்டார். காலச்சக்கரத்தில் ஜனனமும் மரணமும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. ஆனால், காலம் உலகிற்கு சில மனித உன்னதங்களைப் பரிசாகத் தருகிறது. விழிப்புலனற்றவர்களைப் பொறுத்தவரை அன்னை செல்வி சின்னத்தம்பி அவர்கள் காலம் அவர்களுக்கு வழங்கிய பரிசு. அன்னை அவர்கள் விழிப்புலனற்றவர்களின் உள்ளங்களில் மட்டுமன்றி சமூகத்தவர்களின் நெஞ்சங்களிலும் நீங்காது வாழ்வார்.*

*அவரது பூரணத்துவமான பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும். வாழ்வக விருத்திக்கு அன்னாரது ஆத்மபலம் என்றென்றும் துணை நிற்கும். அன்னை அவர்களது ஆத்மா நித்திய நிலைபெற்றில் திளைக்க எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திப்போமாக.*

க.தருமசேகரம்.


# 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**CERTIFICATE IN ENGLISH**
O/L, A/L பூர்த்தி செய்த மாணவர்களுக்கான விஷேட வகுப்பு

**DIPLOMA IN BUSINESS ENGLISH**
உத்தியோகஸ்தர்கள் ஆசிரியர்களுக்கான விசேட வகுப்பு

**DIPLOMA IN ENGLISH**
ஆங்கில அறிவை விருத்தி செய்து கொள்ள

**IELTS**
ஆங்கில அறிவை வளர்க்கவும், வெளிநாடு செல்ல இருப்போருக்குமான விசேட வகுப்பு. உங்கள் வசதிக்கேற்ப வகுப்புக்களில் இணைந்து கொள்ளலாம்.

**BBS**

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
- Pre-Foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

5+ to 14+ சிறுவர்களுக்கான வகுப்புக்கள்

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

வயது 2+ முதல் வயது 3 வரை Play Group
வயது 3+ முதல் வயது 4 வரை Montessori
வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School

2+ to 5+ குழந்தைகளுக்கான அனுமதிகள் பெற்றுக் கொள்ளளாம்

**BRITISH BUSINESS SCHOOL**
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
HOT LINE 021-222-5798 e-mail: british.businessschool@gmail.com


**University of Jaffna, Sri Lanka**

## POST OF RESEARCH ASSISTANT

Applications are invited for the post of full time research assistant to carry out a three year research project in the Department of Botany, University of Jaffna on the "Isolation and characterization of novel anti-bacterial and anti-dipterans lead molecules from medicinal plants" under the Coordinated Thematic Research Programme (CTRP) of the National Science Foundation (NSF). Candidate should have obtained a four year degree in biological science from a recognized University. Preference will be given to those who have Basic knowledge in Chemistry and Zoology and research experience in medicinal plants and microbiology.

Applications giving full bio-data should reach Dr.M.K.Pathmanathan, Senior Lecturer, Department of Botany, University of Jaffna on or before 15.11.2006. Selected candidate shall register for a postgraduate degree and shall be paid an all inclusive stipend of Rs.15,000/= month. There is no application form for this purpose.

13.10.2006 (சி-51143) Registrar

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தொண்டைமானாறு
**ஐயாமுத்து பங்கயற்செல்வம் (நேசமணி)**

[பருத்தித்துறையைத் தற்காலிக வசிப் பிடமாகக் கொண்டிருந்தவர்]

கடந்த 07.08.2006 ஆம் திகதியன்று சிவபதம் எய்திய எங்கள் ஆருயிர் அம்மாவினது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், நோய்வாய்ப்பட்டு இருந்த நேரத்தில் அன்புடன் அம்மாவைப் பார்த்துப் பராமரித்த அன்புள்ளம் கொண்ட குடும்பங்களுக்கும், இறுதிக் கிரியைகளை முன்னின்று நடத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம். தனித் தனியே நன்றிகளைத் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில் நடைபெறும்.

தாயாகவும் தந்தையாகவும் இருந்து எமக்கு நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள் மற்றும் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தும்பளை,
பருத்தித்துறை. (சி/51136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் சில பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.15

கடந்த 6ஆம் திகதி வெளியான ஜீ.சி.ஈ உயர் தரப்பரீட்சையின் தமது மாணவர்களின் முன்னணிப் பெறுபேறுகளை மேலும் சில பாடசாலைகளின் அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பி வைத்துள்ளனர்.

அவற்றின் விவரம் வருமாறு:-

*மகாஜனக் கல்லூரி*

**கணிதம்** : க.மயூரன்- 2பிசீ, சி.சயிந்தன்-பி2சி, கு.ஜனகன்-பி2சி, சு.நிசாகன்-பிசிஎஸ்.

**விஞ்ஞானம்** : வை.வாமணன்-பி2சி, சொ.ஜீவகுமாரன்-பி2சி, ச.சுவந்தினி-பி2சி, ஜெ.ஜெயப்பிரியந்தன்-3சி.

**வர்த்தகம் :** இ.சாமினி- 2ஏபி, சி.லாவண்யா-ஏ2பி, சோ.சுபானி-ஏ2பி, இ.அஜந்தா-3பி, தி.சர்மிலா-3பி, தே.சாருண்யா-ஏ2சி.

**கலைப்பிரிவு** : அ.அஜந்தன்-3ஏ, ஆ.சிவாஜினி-2ஏ பி, கு.சர்மிலா-2ஏபி, சு.சயந்தா-2ஏபி, ஜெஸ்மினா ரீட்டா-2ஏபி, ம.சிந்துஜா-2ஏபி, நா.சிவதுர்க்கா-2ஏசி, து.சதா-2ஏசி, சி.பாரதி-2ஏசி, ரா.சிந்துஜா-2ஏசி, சி.தர்சினி-ஏ2பி, சி.தவராணி-ஏ2 பி, கு.யதர்சினி-ஏ2பி, செ.கஜந்தன்-2பி சி, க.சுகெம்சன்-ஏ2பி, ச.அருட்செல்வி-ஏ2சி, ஞா.கிரியங்கா-ஏ2சி, க.நித்தியா-ஏ2சி, இ.ராஜகாந்தி-ஏ2சி, ம.கமலதாஸ்-ஏபிசி, கு.மயூரன்-ஏபிசி, சி.சதீஸ்வரன்-ஏபிசி, க.மோகனரூபி-ஏபிசி, க.லக்சனா - 3பி, ஆ.சுதன்-3பி, க.சவிதா-3பி, தி.லியோனந்டிரிங்ரன்-3பி.

*ஸ்கந்தவரோதயாக் கல்லூரி*

**கலை** : க.கரிகரசுதன்-3ஏ, ப.மணிவர்ணன்-2ஏபி, சி.துஷ்யந்தி-2ஏபி, ச.நிரஞ்சலா-2ஏபி, கோ.ஹம்சத்பனி-ஏ2பி, த.வசந்தன்-ஏ2பி, யோ.ஜர்மிளா-ஏபிசி, அ.லாவணி-ஏபிசி, இ.ஜெயப்பிரியா-ஏபிசி, ஜெ.கஸ்தூரன்-ஏபிஎஸ், இ.கல்பனா-ஏபி எஸ், இ.அனுஷா-ஏசிஎஸ், மு.சுகந்தினி-ஏசிஎஸ், இ.நிருஜா-ஏசிஎஸ், த.சிவநேசன்-ஏசிஎஸ், அ.றோமியா-3பி.

**வர்த்தகம்** : க.சித்ரா-2பி,சி., ந.நிமல்ராஜ்-2பி,சி., செ.பிரேமினி-பி,2சி., ச.காஞ்சனா-3சி.

**கணிதம்** : ச.விஜயபிரகாஷ்-பி.2சி

**உயிரியல்** : ம.ஆதவன்-2சி,எஸ்.

*உடுப்பிட்டி மகளிர் கல்லூரி*

**விஞ்ஞானம்** ! க.கலைவாணி-3ஏ, மா.விஜிதா-ஏ2பி, சி.கார்த்திகா -பி2சி

**கணிதம் :** ஆர்.ரட்ணதேவி-ஏபிசி, க.சஞ்சுதா-பிசிஎஸ்,

**வர்த்தகம் :** சி.ஹேமலதா-ஏபிசி.

**கலை :** பி.ஜேசுராஜா-2ஏபி, ந.சிவகௌரி-ஏ2பி, ந.சங்கீதா-ஏ2பி, அ.சிந்துசா-ஏபிசி, மு.பவித்திரா-ஏபிசி, த.கிரித்திகா-2ஏஎஸ்.

*கொக்குவில் இந்துக்கல்லூரி*

**கணிதம் :** சி.சிறிகாந்தன்-3ஏ, பே.சுகந்தன்-2ஏபி, ஈ.சனோஜன்-ஏ2பி, க.மிதுனன்-ஏ2பி, ச.சர்வகுமார்-ஏபிசி, சி.பிலுஜா-ஏபிசி, க.கமலாக்சன்-ஏ2சி, கு.கஜந்தன்-3பி, ச.பிரணவன் - 3பி, தே.ஜெயராஸ்-2பிசி, சு.ரஞ்சித்-பி2சி, வி.விஜிகரன்-பி2சி, தி.யதுபாலதரன்-பி,2சி.

**உயிரியல் :** க.சிந்துஜானி-2ஏபி, மு.மயூரி-ஏ2பி, த.தர்மதா-ஏபிசி, பு.தேவரஞ்சனா-3பி, க.கவிதாஸ்-2பிசி, கு.சிவாஜினி-2பிசி, சி.யோகபாலன்-பி2சி, ப.அருண்குமார்-பி2சி.

**வர்த்தகம் :** ப.தக்சன்-3ஏ, நி.பாலநந்தன்-2ஏபி, செ.காண்டீபன்-2ஏபி, பி.பிரசாந்தி-2ஏபி, ம.பிரணவன்-ஏ2பி, ஸ்ரீ.ஹரிகரன்-ஏ2பி, நே.மதியரசன்-ஏ2பி, க.அனுசியா-ஏ2 பி, கு.சபேசன் -ஏ2பி, லோ.லாவண்யன்-ஏபிசி, க.கேசினி ஏபிசி, த.தர்சனா-ஏ2சி, சி.சுஜித்தா-3பி.

**கலை :** நா.மைதிலி-2ஏபி, ப.சாதுர்யா-2ஏபி, ச.கவிதா-2ஏசி, சு.லாவண்யா-2ஏசி, ச.பவித்ரா-2ஏசி, சி.வேலழகன்-ஏபிசி, த.சுபாஜினி-ஏபிசி, உ.காயத்திரி-ஏபிசி, ச.சஜித்தா -ஏபிசி, கி.சசி -ஏபிசி, க.சோபிகா-ஏபிசி, ச.கஜந்தினி-ஏபிசி, யோ.தர்சினி-ஏபிசி, தே.சாம்பவி-ஏ2சி.

*கனகரத்தினம் ம.ம.வி*

**கலை :** இ.சிந்துஜா-3ஏ, ப.பத்மரஞ்சன்-2ஏபி, சே.சிந்துஜா-2ஏபி, யோ.சங்கீதா-2ஏபி, லி.அர்ச்சனா-2ஏபி, தி.பிரதீபா-2ஏஎஸ், கு.லக்ஷிகா-ஏ2பி, த.மிதிலா-ஏ2பி, க.கீதாஞ்சலி-ஏபிசி, வி.சுதர்சினி-ஏபிசி, க.யசோதரன் - ஏபிசி, கே.கஜவரதன்-ஏபிசி, ச.சிந்துஜா- ஏ2சி, ச.அருளமுதா-ஏ2சி, செ.கோகில்-2பிசி.

**வர்த்தகம் :** த.ஜசிந்தன்-ஏ2பி, யே.மேரிஜெனோவா-ஏபிசி, ச.நிருசியா-3பி, அ.றோஜ் மிற்றோன்-3பி, பே.துஷ்யந்தி-2பிசி.

**கணிதம் :** க.பகீரதன்-3சி.

(203-155-79)

# இடிதாக்கியதில் ஆஸ்பத்திரியின் நீர்த்தாங்கிக்குப் பலத்தசேதம்

## 'எக்ஸ்றே' இயந்திரங்களுக்கும் பாதிப்பு

தாவடி, ஒக்.15

நேற்றுமுன்தினம் மாலை பெய்த மழையின் போது யாழ்.போதனா வைத்தியசாலையின் நீர்த்தாங்கியில் இடிவிழுந்ததை அடுத்து அது பலத்த சேதமடைந்தது.

இதனால் சம்பவதினம் இரவோடுஇரவாக நீர்தாங்கியில் இருந்த நீர் முழுவதும் வெளியேறியதுடன் அதற்குரிய நீர்விநியோகக் குழாய்களும் சேதமடைந்து விட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் போதனா வைத்தியசாலைக்குள் இடம்பெறும் நீர் விநியோகம் நேற்று பாதிக்கப்பட்டிருந்தது. இதேவேளை மின்னல் தாக்கியதில் ஆஸ்பத்திரியில் இருந்த 'எக்ஸ்றே' இயந்திரங்களும், மற்றும் சில வைத்தியசாலை உபகரணங்களும் பாதிக்கப்பட்டன என்று ஒரு தகவல் தெரிவித்தது.

(149-78)

# தேங்காய் எண்ணெய் விநியோகிக்க ஏற்பாடு.

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.ப.நோ.கூ.சங்கத்துக்கு உட்பட்ட கிளைகளில் மரக்கறி எண்ணெய் பெறாதவர்களுக்கு தேங்காய் எண்ணெய் வழங்கப்படவிருக்கின்றது.

குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு அரைலீற்றர் மரக்கறி எண்ணெய் வழங்கப்படுகின்றது என்றும் -

அந்த எண்ணெய்யைப் பெறாதவர்களுக்கு அரைலீற்றர் தேங்காய் எண்ணெய் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

குடும்ப அட்டைக்கு ஒரு பைக்கற் பால்மா வழங்கப்படுவதுடன் நானாவிதப் பொருள்களும் வழங்கப்பட்டு வருவதாக ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(1)

# தென்மராட்சியில் 11 பாடசாலைகளை மீள இயக்க முடியாத நிலை

தென்மராட்சி, ஒக்.15

அண்மைய யுத்த அனர்த்தங்களால் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளதாகத் தெரியவருகின்றது.

குறிப்பிட்ட பாடசாலைகளை ஏனைய பாடசாலைகளுடன் இணைத்து இயக்க வலயக் கல்வி அலுவலகத்தினரால் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள மாணவர்கள், தாம் தற்போது தங்கியுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இணைந்து கல்வியினைத் தொடரமுடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

# முகமாலை முன்னரங்க நிலைகள் உரியமுறையில் பலப்படுத்தப்பட்டுள்ளன

## இராணுவப்பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.15

முகமாலை முன்னரங்க நிலைகள் உரிய முறையில் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

முகமாலை முன்னரங்குகளில் இருந்து இராணுவத்தினரை அகற்றுவதற்கு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது - என்றும் அவர் கூறினார்.

முகமாலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 196 விடுதலைப்புலி உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 350 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் - இதே வேளை 130 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் - என்றும் இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

(203)

# அரசும், புலிகளும் மோதலை நிறுத்தி உடன் பேச்சுக்கு முன்வரவேண்டும்

## இந்தியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.15

அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மோதல்களை உடனடியாக நிறுத்தி பேச்சுக்கு முன்வரவேண்டும் என்று இந்தியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்தியுள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும், பின்லாந்து பிரதமமந்திரி மற்றிவெனஹனனும் நேற்று முன்தினம் ஹராரேயில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் வெளியிட்ட அறிக்கையிலேயே இரண்டு தரப்பினரும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வுகாண முடியும். இலங்கையில் இடம்பெறும் மோதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர். பெருமளவானோர் இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

இந்நிலையில் - தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசும் உடனடியாகப் பேச்சுக்குத் திரும்ப வேண்டும் என்று இரு தரப்பும் கேட்டுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே காட்டி வரும் முனைப்புகளுக்குத் தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக இரண்டு தலைவர்களும் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - இலங்கையில் மீண்டும் போர்நிறுத்தப் பணிகளில் ஈடுபட வாய்ப்பு இருக்குமானால் அது தொடர்பாகப் பரிசீலிக்கப்படுமா என பின்லாந்து பிரதமரிடம் கேட்கப்பட்டபோது இலங்கையிலிருந்து வெளியேறியது கவலையளிக்கும் விடயம் என்ற போதும், இலங்கையின் பிரச்சினையில் ஐரோப்பிய ஒன்றியம் ஒத்து [illegible] என்றும் அவர் [illegible] பிட்டார்.

(203)


### வேலை ஆள் தேவை

*சகல வசதிகளும் கொண்ட தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றுக்கு கணனி அறிவுடைய நிறுவனத்தை பொறுப்புடன் இயக்கக்கூடிய பெண் ஊழியர் தேவை.*

(மாநகர எல்லைக்குள் வசிப்பவர்)

**தொடர்பு: தொ.பே.: 021 222 7835**



### மீண்டும் ஆசிரியரின் நேரடி நெறிப்படுத்தலில்

*English Language and Literature*

*(G.C.E O/L* மாணவர்களுக்கான பரீட்சை மைய வகுப்பு)

✱ அனுமதிக்கு பெற்றோர் வருகை அவசியம்

*English Literature For G.C.E A/L, General English For G.C.E. A/L, English Literature For G.A.Q : B.A. Part I; B.A. Part II, English Language (ESC) For G.A.Q : B.A. Part I; B.A. Part II, General English For School Leavers.*

தொடர்பு: **கோ.சுப்பிரமணியம்**

*இல.62, பழம் றோட், கந்தர்மடம். யாழ்ப்பாணம்.*



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

*2006 க.பொ.த. (உ/த) பரீட்சையில் விசேட சித்தி பெறுபேறுகளைப் பெற்ற எமது செல்வங்களை இன்முகத்துடன் பாராட்டுவதோடு, பல்கலைக்கழகம் சென்று கல்வியில் பல சிறப்புகளையும் பெற்று இறை அருளோடு பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.*

1. யா/ இந்துக் கல்லூரி - தில்லைநாதன் உஷானந் *(உயிரியல்)* - 3A *மாவட்ட மட்டம் 02*
2. யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி - ஜெயபாலச்சந்திரன் ரெஜிந்தன் *(கணிதம்)* - 2A,B *மாவட்ட மட்டம் 28*
3. யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - ஜெயபாலச்சந்திரன் தட்சிகா *(வர்த்தகம்)* - A,2B *மாவட்ட மட்டம் 42*

வாழ்த்துவோர்:

திரு. திருமதி அசோக்குமார் விஜயபவானி

(சித்தப்பா, சித்தி)

புன்னாலைக்கட்டுவன்.


# கப்பல் மூலம் 90ஆயிரம் லீற்றர் பெற்றோல் எடுத்துவரப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.15

குடாநாட்டில் மக்களுக்கு விநியோகம் செய்வதற்கென 90 ஆயிரம் லீற்றர் பெற்றோல் எடுத்துவரப்பட்டுள்ளது.

கப்பலில் பரல்களில் எடுத்துவரப்பட்டுள்ள இந்தப் பெற்றோல், எரிபொருள் நிலையங்களுக்கு தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் -

பங்கீட்டு அட்டை பெற்று இதுவரை பெற்றோல் பெறாத வாகன உரிமையாளர்களுக்கு பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)


எமது நிறுவனங்களில் கலை, வர்த்தகத் துறையில் மூன்று பாடங்களிலும் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும், மாவட்ட ரீதியில் முதல் நிலையில் இருக்கின்ற மாணவர்களையும் வாழ்த்தி இதேபோன்று நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட

## A/L DAY CLASS

## கலை, வர்த்தகப் பிரிவுகள்

*நாளை ஆரம்பம் - 16.10.2006 திங்கள்*

எமது மூன்று நிறுவனங்களிலும்

| பாடம் | பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம் | பொருளியற் கல்லூரி இணுவில் | BARATHY சித்தன்கேணி |
|---|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | M.C. சுதாகரன் | M.C. சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| தமிழ் | மீரா | பாலா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ் |
| அளவையியல் | R.P. சர்மா | ஜெயசுரேஸ் | R.P. சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் | பத்மன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| நா. அரங்கியலும் | சுகந்தன், கணேஸ் | கணேஸ் | சுதன் |
| அரசியல் | றஜீவன் | சுஷாஸ் | சுஷாஸ் |

யாழ். நகரில் - 8 a.m இணுவில் 7a.m BARATHY சித்தங்கேணி 3p.m

Note: A/L 2008, 2007 வகுப்புகள் வழமையான நேரப்படி மூன்று இடங்களிலும் நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா சமலங்குளத்தில் நேற்று மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொலை

வவுனியா, ஒக்.15

வவுனியா சமலங்குளம் பகுதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் 3 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலிருந்து ஒட்டோவில் சென்ற மேற்படி இளைஞர்களை இனந்தெரியாத ஆயுததாரிகள் வழிமறித்துத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் விசாரணைகளை நடத்தினார்.

இந்த விசாரணைகளின் போது ''உயிரிழந்த இளைஞர் ஒருவருடன் தமிழ் ஆயுதக்குழு ஒன்று முரண்பட்டு இருந்தது'' என்று சம்பவத்தில் உயிரிழந்த இளைஞர் ஒருவரின் தாயார் நீதிவானிடம் தெரிவித்தார். (166)

## இன்று முதல் 11 மணிநேரம் மின்சாரம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக்.15

குடாநாட்டில் மின்விநியோகம் இன்று முதல் ஒரு மணி நேரத்தினால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் 10 மணிநேரம் வழங்கப்பட்டு வந்த மின்விநியோகம் இன்று முதல் 11 மணிநேரமாக அதிகரிக்கப்படுகின்றது. புதிய ஏற்பாட்டின் படி -

காலை 5 மணி முதல் 7 மணி வரையும் -

காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும் - மாலை 6.30 - மணி முதல் இரவு 10.30 மணி வரையும் -

மூன்று கட்டங்களாக மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

## வேலணையில் மின்னல் தாக்கி 4 பேருக்கு உடல் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15

வேலணை மேற்குப் பகுதியில் மின்னல் தாக்கியதில் நான்கு பேர் உடல் பாதிப்புக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவம் நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

வேலணை மேற்கைச் சேர்ந்த ஏ.கபூரன் (வயது 14), கே.துஷ்யந்தன் (வயது 19), ஞா.நிதுசன் (வயது 9), சு.சிவபாதம் (வயது 45) ஆகியோரே மின்னல் தாக்கியதில் பாதிப்புக்கு உள்ளாகினர். இவர்கள் உடனடியாக ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (78)

## பங்கீட்டு அட்டைக்கு பொருள்கள்

தென்மராட்சி, ஒக்.15

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி மேற்கு ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைக் கடைகளில் இன்று தொடக்கம் அத்தியாவசியப் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

கொத்தமல்லி, பூடு, சின்னச்சீரகம், பயறு, உழுந்து, அவல், கடலை, ரின்மீன், நூடில்ஸ், தீப்பெட்டி, தேங்காய்பால்மா, சர்க்கரை, தேயிலை, தேங்காய் எண்ணெய், சன்லைட், கைலண்ட் பால்மா ஆகிய பொருள்களே வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு சங்கங்களுக்கும் குறைந்த அளவு பொருள்களே வழங்கப்பட்டுள்ளதால், கிளைகளில் உள்ள பங்கீட்டு அட்டைக்கு ஏற்ப பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'கராஜ்' உரிமையாளர் சுட்டுக்கொலை!

கே.கே.எஸ். வீதியில் தட்டாதெருச் சந்திக்கு சமீபமாக நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அந்தப் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் 'கராஜ்' நடத்தி வரும் சிவகுருநாதர் வீதியைச் சேர்ந்த சதாசிவம் அனந்தசிவம் (வயது 34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

காரஜில் அவர் நின்ற சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர் மீது வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1)

## மூதூரில் படுகொலை செய்யப்பட்ட ஏனைய 15 பணியாளர்களது உடல்களும் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் கொலையுடன் தொடர்புடையவர்களைக் கண்டறியும் நோக்கில், படுகொலையுண்டவர்களில் ஏனைய 15 பணியாளரின் சடலங்களும் அடுத்தவாரம் மீளத்தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த விசாரணைகளின் போது சர்வதேச கண்காணிப்பாளர்களும் பிரசன்னமாகி இருப்பர் என பிரான்ஸைத் தலைமையாகக் கொண்ட குறிப்பிட்ட தன்னார்வ நிறுவனம் தெரிவித்ததாக 'ரொய்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டவுடன் எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

இதன்போது ஆஸ்திரேலிய நிபுணர்களும் பிரசன்னமாகியிருப்பர் என்றும் - அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது.

மேற்படி பணியாளர்களில் இருவரின் சடலங்கள் ஏற்கனவே தோண்டி எடுக்கப்பட்டு மீள் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டமை தெரிந்ததே.

2003 ஆம் ஆண்டு ஈராக்கிய தலைநகர் பக்தாத்தில் வைத்து ஐ.நா. சபை அலுவலகத்தில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 22 ஐ.நா சபைப்பணியாளர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பின்னர் இடம்பெற்ற மோசமான சம்பவம் இது என குறிப்பிட்ட தொண்டு நிறுவனம் தெரிவித்திருப்பதாக 'ரொய்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது. (12)

### மேலும் 4 சடலங்கள் ஒப்படைப்பு

முகமாலை மோதல்களில் உயிரிழந்த மேலும் நான்கு படையினரின் சடலங்கள் நேற்றையதினம் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

முகமாலையில் உயிரிழந்த 74 படையினரின் சடலங்கள் ஏற்கனவே செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக அரசிடம் ஒப்படைக்கப்பட்டமை தெரிந்ததே.

## போவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் பயண ஏற்பாடுகள் குறித்து சமாதானத் தூதுவர் போவருடன் நடைபெறும் சந்திப்பின்போது இறுதியாக்கப்படும் என்று கிளிநொச்சி வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிடுகின்றன.

ஜெனீவாவில் இம்மாதம் 28ஆம் 29ஆம் திகதிகளில் அரசும் விடுதலைப் புலிகளும் பேசுவதற்கு இரு தரப்புகளும் ஏற்கனவே இணங்கி உள்ளன.

ஆயினும் வடக்கிலும், கிழக்கிலும் அண்மை நாள்களாக இரு தரப்புகளுக்கும் இடையில் பெரும் சமர்கள் நடைபெற்று வருவதால் -

உத்தேச பேச்சுக்கள் தவறாமல் நடைபெறுமா என்பதில் எல்லாத் தரப்புகளிலும் பலத்த சந்தேகம் நிலவிவருகிறது.

மோதல்கள் பேச்சுக்களுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய புறநிலைகள் தோன்றியுள்ளதால் அது குறித்துப் பெரும் தேக்க நிலையும் உருவாகி இருக்கிறது.

விசேட தூதுவர் போவரின் கிளிநொச்சி வருகையோடு அந்தத் தேக்க நிலை நீங்கிவிடும் என்று சொல்லப்படுகிறது.

அரசாங்கத் தரப்பு போரை முடுக்கிவிட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை, சமாதானப் பேச்சுக்கான ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

ஜெனீவாப் பேச்சுக்களில் அரசாங்கத் தரப்பில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கலந்தாலோசனை நடத்தியது தெரிந்ததே.

### அரச தூதுக்குழுவுக்கு விசேட செயலமர்வு

இதேவேளை -

அரசுத் தரப்பில் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினருக்கு, பேச்சுக்களில் கையாளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து விசேட செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இம்மாதம் 21, 22ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்தச் செயலமர்வின் போது சர்வகட்சி மாநாட்டில் இனங்காணப்பட்ட விடயங்கள் குறித்து நிபுணர்கள் குழுவினர் கலந்துகொண்டு விளக்கமளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## யசூசி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகாஷி இதற்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது தலைவர் பிரபாகரனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்தார் என்பதும் -

அப்போதும் அதற்கான சமிக்ஞை கிடைக்காததால் அவர் வன்னி விஜயத்தை கைவிட்டிருந்தார் என்பதும் - தெரிந்தவையே. (அ-1)

## சிறுபான்மையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ள தமது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அம்சங்கள் வருமாறு:-

★ தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதிலும் அரசுக்கு தமது கருத்துக்களை தெரியப்படுத்துவதிலும் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். அரசமைப்பிலுள்ள தமிழ்மொழி விசேட சரத்துக்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. உயர் பதவிகளில் தமிழ் பேசும் அலுவலர்கள் போதியளவில் இல்லாமையும் இதற்குக் காரணம்.

★ தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அத்துடன் அவர்களது உயிருக்கும் உடமைகளுக்கும் அச்சுறுத்தலற்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து 1990இல் வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் ஆயுத படையினர் மீதும் பொலீஸார் மீதும் நம்பிக்கை இழந்துள்ளார்கள். இந்த நிலையும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

★ இனமோதல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழ் - மு[illegible]லிம் மக்கள் தற்போது தற்காலிக மு[illegible]ாம்களிலும், கொட்டகைகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்று நிரந்தரமாக வீடுகளில் குடியமர வசதி செய்யப்படவேண்டும். இல்லையேல் மாற்றிடங்களில் நிரந்தரமான வீடுகளில் குடியமர ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் 'சுனாமி'யால் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்பதும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ளடங்கும் காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். அத்தோடு உயர் பாதுகாப்பு வலயங்களின் விஸ்தீரணத்தை படிப்படியாகக் குறைப்பதற்கு பயன்தரவல்ல - உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து போதிய நிதி ஒதுக்கப்படவேண்டும்.

★ குடியேற்றத்திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படும் போது சிறுபான்மையினருக்கு நியாயமும் அதேவேளை - அவர்கள் மீது விசேட கவனமும் செலுத்தப்படல் வேண்டும்.

★ வேலைவாய்ப்பில் நிலவும் சமனற்ற நிலையை நீக்குவதற்கு சிறுபான்மையின மக்களுக்கு சமசந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். பிராந்திய நிர்வாகங்களுக்கான அதிகாரிகள் மட்ட ஆட்சேர்ப்பிலும் சமவாய்ப்பு அளிக்கப்படல்வேண்டும்.

★ அரசமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் அத்தியாயம் மேலும் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்கண்ட நிபுணர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசமைப்பில் மாற்றமோ திருத்தமோ செய்யத்தேவையில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட சிபார்சுகளை நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்பின் கீழ் செயற்படுத்தவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் - எனவும் தகவல் திணைக்கள அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. (அ)

## பேக்கரியினுள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தில் சிக்கிப் படுகாயமடைந்த இரண்டு இளைஞர்கள், உடனடியாக ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னிரவு சேர்க்கப்பட்டனர்.

குறிப்பிட்ட இரு இ[illegible]ஞர்களும் வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

## ஐந்தாம் கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகம் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அரச அதிபர் மேலும் கூறினார்.

இடம்பெயர்ந்த மற்றும் மீனவர், வலுக்குறைந்தோர், சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் ஆகியோருக்கு மூன்றாம் கட்ட விநியோகத்தில் வழங்கப்பட்ட அளவில் பொருள்கள் தற்போது ஐந்தாம் கட்டத்தில் நிவாரணமாக வழங்கப்படும் என்றும்

ஏனையோருக்கு பணத்துக்கு பொருள்கள் வழங்கப்படும் என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார். ( )

## மரண அறிவித்தல்

### சதாசிவம் அனந்தசிவம் (மெக்கானிக் சுரேஸ்)

சிவகுருநாதர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் அனந்தசிவம் நேற்று (14.10.2006) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சதாசிவம் (திருநாவுக்கரசு) - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் ஞானலோஜினி (ஆசிரியை - கியூமெடிக்கா சர்வதேச பாடசாலை), ஞானரூபி, ஞானசுரேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வகுமரனின் (சவூதி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (15.10.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம.

தகவல்:
சதாசிவம் (திருநாவுக்கரசு)
(தந்தை).


வெளிவந்துள்ளது!

தரம் 6,7,8 மாணவர்கள் இலகுவாக ஆங்கிலம் கற்க

WORDS - WORDS AT WORK




(பாடப்புத்தகத்திலுள்ள சொற்களும் விளக்கமும்)

தொகுப்பு: P.MATHAN

பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

N.C.A.கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்

A/L 2007 DAY CLASS

ஆரம்பம்: 16.10.2006 திங்கள் 8 மணி

| | |
|---|---|
| Eco.- | N.B.கஜீதரன் |
| Acc.- | N.சதீஸ் |
| B.st.- | K.M.தாஸ் |
| Tam.- | P.மகாலிங்கசிவம்<br>P.பாலமுரளி |
| H.c.- | S.பிரதீஸ் |
| Log.- | M.பிரகாஸ் |
| Geo.- | R.கரன் |
| Drama- | K.T.தர்மா |
| P.Sci. | S.செந்தூரன் |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org